உலக வங்கியின் உதவியின் கீழ் 2014ஆம் ஆண்டிலிருந்து அமுற்படுத்தப்பட்டு வருகின்ற அங்கவீனமுற்ற நபர்களுக்கு நிதி உதவியினை வழங்குவது மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியளித்தல் தொடர்பான "திரிசவிய" எனும் செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகள் திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே காலாண்டு மற்றும் வருடாந்த மேம்பாடு பற்றி உலக வங்கிக்கு முன்னளிக்கப்படுகின்றது.

3.3.3 தன்னார்வத் தொண்டர் செயலகம் தாபித்தல்

திட்டமிடல் பிரிவின் முற்றுமுழுதான கண்காணிப்பின் கீழ் தன்னார்வத் தொண்டர் செயலகம் 2014 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்ப கட்ட பணிகள் நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சு மற்றும் UNDP, UNV ஆகிய நிறுவனங்களின் ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. தன்னார்வத்துடன் பணியாற்ற விரும்புகின்ற பொதுமக்களுக்கு தன்னார்வத் தொண்டர்களாக பதிவுசெய்து கொள்வதற்குப் போதிய வசதிகளை வழங்கும் பொருட்டு விசேட இணையத்தளம் தற்போது திறக்கப்பட்டுள்ளது.

04.உளவளத்துணை பிரிவு



இப் பணிஇலக்கினை அடைந்து கொள்வதற்காக அமைச்சின் உளவளத்துணை பிரிவின் 181 உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களிலும், மாவட்டச் செயலகங்களிலும் இணைந்து சேவையாற்றி வருகின்றனர்.

4.1 தேசிய உளவளத்துணை பிரிவிற்குரியதான தொழிற்கூறு

- உளவளத்துணை சேவைக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைத்தல்.
- உளவளத்துணை சேவைகளுக்கான பிரமாணங்களை உருவாக்குதல்.
- உளவளத்துணை சேவைகளில் மனிதவளங்களுக்கான ஆற்றலைக் கட்டியெழுப்புதல்
- உளவளத்துணை சேவைகளை வழங்குகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- தேசிய உளவளத்துணை தினம் ஒக்டோபர் 15ம் திகதி கொண்டாடப்படல்
- பிரதேச செயலகப் பிரிவு மட்டங்களில் உளவளத்துணை சேவை நிலையங்களை அமைத்தலும் உளவளத்துணைச் வளவாளர்களை சேவையில் ஈடுபடுத்தலும், சித்சரண உளவளத்துணை நிலையங்களை தாபித்தல்
- அரச உத்தியோகத்தர்கள், சமுதாயத் தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருக்கு உளவளத்துணை மற்றும் உளநோய்ச் சிகிச்சை மற்றும் அதன் பிரதிபலன்கள் பற்றி அறிவூட்டுவதன் மூலம் உளவளத்துணைச் சேவைகளை விரிவாக்குதல்.
- இயற்கை மற்றும் மனிதனால்ஏற்படுகின்ற பாதிப்புகளுக்குள்ளான மக்களுக்காக உளவளத்துணை சிகிச்சைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- உளவளத்துணை, உள சிகிச்சை மற்றும் அதன் பயன்கள் தொடர்பாக சமூகத்துக்கு விழிப்புணர்வு ஊட்டக்கூடிய பிரசுரங்களை விநியோகித்தல் (சிங்களம், தமிழ் மொழிகளில்)
- உள சமூகப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான முன்னேற்றகரமான மற்றும் பரிகார உளவளத்துணை நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- 24 மணிநேரத் செல்லிட தொலைபேசி உளவளத்துணை சேவைகளூடாக நாடு பூராகவுமுள்ள உளவளத்துணை உத்தியோகத்தர்கள் மூலம் சமுதாயத்தினரைத் தொடர்புபடுத்தல்.
- உளவளத்துணை தொடர்பான குறுகிய கால திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

- அரச நிறுவனங்களில் வினைத்திறன் மற்றும் விளைதிறன் மேம்பாட்டிற்காக எண்ணக்கரு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- உளவளத்துணைச் சேவைகள் தேவைப்படுகின்ற அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்ட உளவளத்துணையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொடுத்தல். (உளச் சுகாதாரப் பிரிவு, சுகாதார வைத்திய நிலையம், சிறைச்சாலைகள், புனர்வாழ்வளிப்பு நிலையங்கள், வைத்தியசாலைகள், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள், விமான சேவை கம்பனிகள்)

4.2. 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

4.2.1 தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக நடாத்தப்பட்ட சிகிச்சைசார் மற்றும் தீர்வுசார் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள்.

தொ. இல.	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்.திட்டங்களின் தொகை	பயனுறுவோர் தொகை
1	சமூதாய தலைவர்களுக்கான உளவளத்துணை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்	152	4,125
2	சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீண்டகால உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பவர்களுக்கான உளவியல் ரீதியான உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம்	19	1,247
3	கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தின் 701சேவை நாடுநர்கள் தொடர்பாக வேலைத்திட்டங்களையும் உளவளத்துணை சேவைகளையும் முன்னெடுத்தல்	23 (05நாட்கள்)	701
4	"உளநல தினத்தினை முன்னிட்டு ஒவ்வொரு மாவட்ட மட்டங்களிலுமுள்ள வைத்தியசாலை உளநல பிரிவுடன் இணைந்து ரூபா.25,000ற்கு பெறுமதியான உபகரணங்கள் வழங்கல்	16	
5	பிரதேச மட்டத்தில் உளச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்	190	7,659
6	பிரதேச மட்டத்தில் உளவளத்துணை அலுவலர்களுக்கான செயற்திட்ட செயற்பாட்டினை அமுல்படுத்தும் ஆலோசனை தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தல்	04	329
7	பிரதேசமட்ட உளவளத்துணை அலுவலர்களினால் கல்வி (பாடசாலை, முன்பள்ளி, அறநெறிப் பாடசாலை), குடும்பம் (திருமணத்திற்கு முன், திருமணம், கர்ப்பிணி), இளைஞர் மற்றும் முதியோர் ஆகியோருக்கான போதைப் பொருட்களிலிருந்து மீட்சி உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை	4,155	178,044
8	தனிநபர் உளவளத்துணை		25,874

4.2.2 கொள்திறன் நிகழ்ச்சித் திட்டங்கள்

தொ. இல.	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ். திட்ட. எண்.	கலந்துகொண்ட வகையினர்	கலந்து கொண்ட தொகையினர்
01	திறன்விருத்தி பயிற்சித் திட்டம்	01	உளவளத்துணைஉதவியாளர்(03 நாள்)	86
02	திறன்விருத்தி பயிற்சித் திட்டம்	01	அபிவிருத்தி அலுவலர்(உளவளத்துணை) 03நாள்	89
03	போதைப்பொருளுக்கு அடிமையான வர்களுக்கான புனர்வாழ்வளிப்பு தொடர்பான பயிற்சித் திட்டம்	01	உளவளத்துணைஉதவியாளர்,அ பிவிருத்தி அலுவலர் (உளவளத்துணை) 03நாள்	50
04	பயிலுனர்களுக்கான பயிற்றுவித்தல் தொடர்பான வேலைத்திட்டம்	01	கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில்பணியாற்றும் இராணுவத்தினர் (05நாள்)	25
05	வீட்டுவன்முறையை தடுத்தல் மற்றும் கட்டிளமைப் பருவத்தினரின் பிரச்சினைகளை இனங்காணல் தொடர்பான பயிற்சித்திட்டம்.	03	அபிவிருத்தி அலுவலர் (உளவளத்துணை) 05நாள்	89
06	உளவளத்துணை உதவியாளர்களாக பயிலுநர்களை பயிற்றுவித்தல் தொடர்பான வேலைத்திட்டம்	01	இராணுவத்தினர் (05நாள்)	41
07	பயிலுனர்களுக்கான பயிற்றுவித்தல் தொடர்பான வேலைத்திட்டம்	01	சிறைச்சாலைகள் புனர்வாழ்வு அலுவலர்கள் (05நாள்)	25

4.2.3 தனிநபர் ஆளுமை விருத்தி

தொ. இல.	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ். திட்ட. எண்.	கலந்துகொண்ட வகையினர்	கலந்துகொண்ட தொகையினர்
01	விசேட “சபோதயா” உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம்	08	அரசாங்க அலுவலர்கள்	372
02	கல்வி உளவளத்துணை நிகழ்ச்சிதிட்டம்	01	பாடசாலை மாணவர்கள்	421

4.2.4 24 மணிநேர நடமாடும் தொலைபேசி உளவளத்துணை சேவை வழங்கல்

டயலொக்" கையடக்கத் தொலைபேசி வலைப்பின்னலினூடாக எமது 82 உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்களினால் மக்களின் உளப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உளவளத்துணைச் சேவை வழங்குதல்.

4.2.5 வெளியீடுகளும், அச்சிடுதலும்

I. உளவளத்துணை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் 20,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டமை.

II. உளவளத்துணை தின1500 சஞ்சிகைகள் வெளியிடப்பட்டமை.

III. தேசிய உளவளத்துணைசேவை தினத்தினையொட்டி 190 மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டமை.

4.2.6 தேசிய உளவளத்துணை சேவைகள் தினத்திற்கு நிகராக உளவளத்துணை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

"உளநோயாளர்களைப் புனர்வாழ்வளிப்பதற்கு உளவளத்துணையூடாக உதவியளிப்போம்" என்ற தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு தேசிய உளவளத்துணைச் சேவைகள் தினக் கொண்டாட்ட வைபவம் இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் 2014 ஒக்டோபர் 15 ஆந் திகதி அரச மற்றும் அரச சார்பற்ற உளவளத்துணைச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து நடாத்தப்பட்டமை.

4.2.7 வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுனிசெவ் செயற்திட்டத்தின் கீழ் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்

I. யுனிசெவ் நிதியுதவியின் கீழ் வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்கள், பாடசாலைச் சிறார்கள், அரச உத்தியோகத்தர்களுக்கான உளவளத்துணை தொடர்பான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், சிகிச்சைகள், தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட உளவளத்துணை மற்றும் உள சமூக பணியாளர்களூடாக செயற்படுத்தல்

II. ஆர்வத்துடன் செவிமடுத்தல் தொடர்பாக மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்ககளை நடாத்துதல்.

4.2.8 உளவளத்துணை சேவை நியமங்கள்

தொ. இல.	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்.திட்டங்களின் தொகை	பயனுறுவோர் தொகை
01	ஒத்த குழுக்களின் பரிசீலனை மாதிரிப் படிவம்ஒன்றினை அறிமுகப்படுத்தும் நிகழ்ம்ச்சித்திட்டம்	13	181
02	சேவை பெறுநர்களின் மதிப்பீடு தொடர்பாக பொது மாதிரிப் படிவம் ஒன்றினைத் தயாரிக்கும் வேலைத்திட்டம்	7	54
03	உளவளத்துணைச் சேவைக்குரியதானதகவல்களை திரட்டுவதற்கான மாதிரிப் படிவமொன்றை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்	6	30
04	உளவளத்துணைச் சேவைக்குரியதான றியமப்படுத்துகை தொடர்பான போதிய பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்	02	42
05	உளவளத்துணைச் அலுவலர்களின் பணிகளை ஒழுங்காக பேணல் தொடர்பாக கடமைப் பட்டியல் தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டம்	8	72

4.3 பௌதீக மற்றும் நிதிசார் மேம்பாடு (2014.12.31 வரை)

தொ. இல	தொழிற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்	நிதிசார் முன்னேற்றம் ரூபா.மி.	பயனாளிகளின் எண்ணிக்கை
01	உளவளத்துணை மற்றும் உளவளத்துணைச் சிகிச்சைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். (தேசிய/பிரதேச ரீதியில்)	413 நிகழ்ச்சித் திட்டங்கள்,	3.596	7032
02	24 மணிநேரக் கையடக்கத் தொலைபேசி உளவளத்துணை நிகழ்ச்சித்திட்டங்கள்.	82 மாதாந்த தொலைபேசி கட்டணங்கள்	0.023	46316
03	கொள்திறன்விருத்தி உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள்	09 நிகழ்ச்சித் திட்டங்கள்	1.527	181
04	பிரசுரங்கள்	20000 துண்டுப் பிரசுரங்கள் 1500 சஞ்சிகைகள்	0.689	-
05	உளவளத்துணை தினம் மற்றும் உளவளத்துணைச் சேவை வழங்கும் நிறுவக இணைப்புப் பணிகள்	01நிகழ்ச்சித் திட்டம்	0.904	545
06	நிர்மாணித்தல்/ பழுதுபார்த்தல்/ தளபாட உபகரணங்களை வழங்கல்	01 நிர்மாணிப்பு (தெயட்ட கிருல) உபகரணங்கள் - 29	5.261	181

05.அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

பணிக்கூற்று

"வழிகாட்டல், ஒருங்கிணைப்பு, அபிவிருத்தி ஆகிய செயற்பாடுகளை அமுற்படுத்துதல், இயக்குதலினூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளை விருத்தி செய்தல், மேம்படுத்துதல், பாதுகாப்பினை உறுதி செய்தல், மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்குதல்".

5.1 குறிக்கோள்

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளை மேம்படுத்துதல், முன்னேற்றுதல், பாதுகாப்பது தொடர்பாகவும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாகவும் ஏற்பாட்டுகளை திட்டமிடுவதற்காகவும் விதிக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தற் சட்டத்திற்குரியதான சட்டரீதியான எற்பாட்டினைத் திட்டமிடல்

.

5.1.1 பணிகள் மற்றும் செயற்பாடுகள்

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை எய்து வதற்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளித்தல், அவர்களது நலன்புரி மற்றும் அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குதல் போன்ற தேசியக் கொள்கைகளை வலுவூட்டுவதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளை அமுற்படுத்துவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை தாபிக்கப்பட்டது. அத்தீர்மானங்களுடன் ஏற்புடையதாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் பின்வரும் விடயங்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும்நிலையைக் குறைத்தல் மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள்.
- அங்கவீனம் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களைக் கண்டறிதல் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்.
- அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான சரியான தரவுகள் மற்றும் புள்ளி விபரங்களை பேணல்.

- அங்கவீனமுற்ற நபர்களின் மேம்பாடு மற்றும் நலன்புரிக்காக தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல், வழிகாட்டல் மற்றும் தேவையானபோது உதவிகளை வழங்குதல்.
- ஒன்றிணைக்கும் அபிவிருத்திக்கான அணுகுமுறைகளை இலகுபடுத்துதல், பௌதீகச் சூழலைவடிவமைத்தல், அது தொடர்பாக குறித்த தரப்பினரின் செயற்பாடு, வழிகாட்டலுடன் தேவையானபோது உதவிகளை வழங்குதல்.
- கல்வி பயில வேண்டிய வயதிலுள்ள பாடசாலை செல்லுகின்ற மற்றும் தற்போது பாடசாலை செல்லாத அங்கவீனமுற்ற பிள்ளைகளைத் தொடர்ச்சியாகப் பாடசாலைக் கல்வியைப் பெறுவதற்காக அனுப்புவது தொடர்பான வேலைத்திட்டங்களை அமுற்படுத்துதல் மற்றும் தேவையானபோது உதவிகளை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களை ஒன்றிணைக்கும் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வித்தல் தொடர்பான சமூகப் பொறுப்பு சம்பந்தமாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் விளம்பரச் செயற்பாடுகள் தொடர்பான நிகழச்சித் திட்டங்களை அமுற்படுத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்கள் அதிகளவில் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களைக் கண்டறிந்து அவ் அங்கவீனத் தன்மை அதிகரிப்பதிற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மீது பொது மக்களின் கவனத்தினைச் செலுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல், தொடர்ச்சியான செயற்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றத்தினைப் பகுப்பாய்வு செய்தல்.

5.2 நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் (2014.12.31வரை)

5.2.1 அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டரீதியான ஏற்பாட்டினை அமுற்படுத்தல்.

5.2.1.1 அங்கவீனமுற்றநபர்களின்உரிமைகளைப்பாதுகாத்தலுக்கானபுதியசட்டவரைவு

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலுக்கான 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினை மேலும் மேம்படுத்தி, விசேட வரைவுக் குழுவொன்றினூடாக வரைவினை மேற்கொண்டு நிறைவு செய்யப்பட்ட புதிய சட்ட வரைவு தொடர்பாக உரிய தரப்பினரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

5.2.1.2 சைகை மொழிச் சட்ட வரைவு

சைகை மொழி அங்கீகரிக்கப்பட்ட மொழியொன்றாகப் பாராளுமன்றத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால், அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சைகை மொழிச் சட்ட வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்படும் வரை, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைவு தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. அச்சட்ட வரைவு மேலும் மேம்படுத்தப்படல் வேண்டும் என முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அத்துறைசார்வல்லுநர்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

5.2.1.2 வெள்ளைப் பிரம்புப் பாவனையாளர்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பினை வழங்குவதற்கான சட்ட வரைவு

இது தொடர்பாக ஆரம்பச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அச்சட்ட வரைவினை மேலும் மேம்படுத்துவதற்கு அத்துறைசார் வல்லுநர்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

5.2.2 இலங்கையின் அங்கவீனம் தொடர்பான தேசிய செயற்பாட்டுத் திட்டம்

பாராளுமன்றத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள இலங்கையின் அங்கவீனம் தொடர்பான தேசிய செயற்பாட்டுத்திட்டத்தின் அச்சிடல் பணிகள் நிறைவு பெற்று வருவதுடன் அதனை வெளியிடுவதற்குரிய தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

5.2.3 வருமானத்தினை உருவாக்கத்திறகாக சுய தொழில் உதவிகளை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களைக் கொண்டுள்ள குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களிற் காணப்படும் பொருளாதார ரீதியான வறுமையினைக் குறைப்பதற்குச் சுய தொழில் உதவியொன்றை ஆரம்பித்தல் அல்லது மேம்படுத்துவதற்காக நபர் ஒருவருக்கு அல்லது குடும்பம் ஒன்றுக்கு ஆகக்கூடியது ரூபா. 25,000/- ஐ வழங்கி சுய தொழில் உதவியொன்றை ஆரம்பித்தல், ஒழுங்குறுத்தல், உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் விற்பனையில் இடையிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் என்பன இவ் வேலைத்திட்டத்தின் கீழ் இடம்பெற்று வருகின்றன.

பயனுறுவோர் எண்ணிக்கை	தொகை(ரூ.மி)
294	6.19

5.2.4 நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தல்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திற் பதிவு செய்துள்ள தன்னார்வத் தொண்டர் அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிலையங்களில் தரம் தொடர்பான கண்காணிப்பு, ஒழுங்குறுத்தல்போதியளவு உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல். இவ்வாறு பதிவு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 85 ஆகும்

5.2.5 அங்கவீனமுற்ற நபர்களுக்கு உட்பிரவேச வசதிகளை வழங்குதல்.

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம், 2006.10.17 ஆந் திகதிய 1467/15 ஆம் இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய 1619/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக வெளியிடப்பட்ட2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான(உட்பிரவேச) கட்டளைகளுக் கமைய தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து பிரசித்திபெற்ற கட்டிடங்கள், பிரசித்தி பெற்ற இடங்கள் மற்றும் பொது சேவைகள் வழங்கப்படுகின்ற இடங்கள் ஆகியன அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக் கூடியவாறு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ் உட்பிரவேசிப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த கால வரையறை 2014 ஒக்டோபர் 16 ஆந் திகதியுடன் முடிவடைகின்றது. அதன் பிற்பாடு மேற்குறிப்பிட்ட கட்டளைகளுக்கமைய செயற்படாத நிறுவனங்கள்/இடங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு போதிய

சட்டரீதியான ஒழுங்குவிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட நோக்கினை எய்தும் பொருட்டு2014 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரை தமங்கடுவ, சங்கானை, குறுவிட்ட, பலாங்கொடை, வெருகல், இப்பாகமுவ, பதவி ஸ்ரீபுர, இமதுவ, வவுனியா, கரவெட்டி மற்றும் முந்தல் போன்ற பிரதேச செயலகங்களுக்கும், ஹட்டன், அப்புத்தளை, மாத்தளை, திருகோணமலை போன்ற இடங்களிலுள்ள தொழில் அலுவலகங்களுக்கும், மொனராகலை, மெதகம பிரதேச செயலகப் பிரிவின் வாக்கெடுப்பு நிலையங்களுக்கும், யாழ் மாவட்டத்திலுள்ள 21 வைத்தியசாலைகளுக்கும் உட்பிரவேசிப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூபா. 2.98மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு உட்பிரவேசிப்பு வசதிகளுடன்கூடிய கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக உள்ளூராட்சி அதிகாரிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், வரைபட கலைஞர்கள்உட்பட உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு வட மத்திய, ஊவா, சப்பிரகமுவ, கிழக்கு, மத்திய, தென் மற்றும் மேல் மாகாணங்களில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும், முல்லைத்தீவு மாவட்டத்திற் நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டத்தில் குறித்த950 உத்தியோகத்தர்கள்விழிப்புணர்வூட்டப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டதுடன் அதற்காக ரூபாய் 4இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

செயற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்	தொகை(ரூபா)
உட்பிரவேச வசதிகளை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்	15 நிறுவனங்கள்	2,989,899.22
உட்பிரவேச வசதிகளை அமைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	10 நிகழ்ச்சித் திட்டங்கள்	350,148.00
எண்ணிக்கை		3,340,047.22

5.2.6 உட்பிரவேசவசதியளிப்புக்கள் தொடர்பானசட்டரீதியானதொடர்பு பற்றிய விழிப்புணர்வூட்டல்நிகழ்ச்சித்திட்டங்களைநடாத்துதல்.

விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவினம் ரூபா.
10	945	350,148/=

5.2.7 அங்கவீனமுற்றோருக்கான மாதாந்த படி வழங்கல்

மகிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூபா. 3000/- வீதம் வாழ்வாதார உதவு தொகை வழங்கும் வேலைத்திட்டம் 2007ஆம் ஆண்டிலிருந்து அமுற்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வுதவுதொகை வழங்கப்படும்போது குடும்ப வறுமை, அங்கவீனத் தன்மை, வீட்டுத் தலைவர் அங்கவீனராக இருத்தல், குடும்பத்திலுள்ள அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை போன்ற காரணிகளைக் கவனத்திற் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் இக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றன.

பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை (ரூ.மி.)
22,941	618.99

இவ் வேலைத்திட்டத்தினூடாக அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலைமை, போசாக்கு, உள மற்றும் சமுதாய மட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளதாகக் வெளிக்கள ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளன.

5.2.8 கல்வி உதவியினை வழங்குதல்.

குறைந்த வருமானத்தினைக் கொண்ட அங்கவீனமுற்ற சிறார்கள் மற்றும் அங்கவீனமுற்ற பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு ஒரு தடைவை மாத்திரம் வழங்கப்படும் இக்கல்வி உதவு தொகை ஆகக்கூடியது ரூபா. 10,000/- ஆகும். பாடசாலை செல்வதற்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் கல்வி உபகரணங்களை வழங்குவதற்குமாக இத்தொகை வழங்கப்படுகின்றது.

இவ்வுதவு தொகையினை வழங்குவதன் காரணமாகப் பாடசாலை செல்கின்ற வயதிலுள்ள அங்கவீனமுற்ற சிறார்கள் கல்வியினைத் தொடர்வது அதிகரித்துள்ளதாகக் கள ஆய்வுகளிலிருந்து அறியக்கிடைத்துள்ளது.

இவ்வருடத்தில் உதவுதொகை வழங்கப்பட்டுள்ளவிபரங்கள்வருமாறு.

பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை(ரூபா.மி)
313	1.64

5.2.9 துணை உபகரணங்களை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களின் புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காகவும், ஒன்றிணைக்கும் மேம்பாட்டுச் செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்வதற்கும், அவர்களைச் சுயமாக இயங்கும் நபர்களாக உருவாக்குவதற்குமாக மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள், செவிப்புலன் கருவிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஊன்றுகோல்கள் போன்ற உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குறைந்த வருமானம் பெறும் நபர்கள் தொடர்பாக வழங்கப்படும் இவ் உபகரணங்கள் மருத்துவப் பரிந்துரையின் அடிப்படையில் பின்வருமாறு இவ்வருடத்தினுள் வழங்கப்பட்டுள்ளன.

மூக்குக் கண்ணாடிகள்	சக்கர நாற்காலிகள் (சாதாரணம் மற்றும் கொமட்டுடன் கூடிய)	முச்சக்கர வண்டிகள்	கையூன்று கோல்கள்	செவிப்புலக் கருவிகள்	ஊன்று கோல்கள்	தொகை (ரூ.மி.)
134,058	662	08	372	83	269	30.2

5.2.10 வீடமைப்பு உதவி வேலைத்திட்டம்

வாழ்வதற்கு வீடொன்றில்லாத குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு அல்லது அவருக்கு உணவு வழங்கிப் பாதுகாக்கின்ற குடும்பங்களுக்காகப் புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கு, வீட்டின் பகுதியினை நிர்மாணிப்பதற்கு ஆகக்கூடியது ரூபா. 250,000/- அடிப்டையிலும் வீட்டின் திருத்தப் பணிகளுக்காகஆகக்கூடியது ரூபா. 150,000/- அடிப்படையிலும் உதவிகள் வழங்கப்படுகின்றன. சுப்பிரி வாசனா சம்பத் லொத்தர் விற்பனை வருமானங்களிலிருந்து 5% இற்றை வரையில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய நிதியத்திற்கு வரவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 354வீடுகள் தொடர்பாக ரூபா. 43.77மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

5.2.11 வைத்திய உதவி வழங்குதல்

அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் நீண்டகாலமாக நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக மருந்துகளைக் பெற்றுக்கொள்ளும்போது அவ் வைத்தியசாலைகளில் வழங்கப்படாத மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், சிகிச்சைகளுக்குச் செல்வதற்காகவும், பயணச் செலவுகளை ஈடுசெய்வதற்காகவும், இதய, கண், சிறுநீரகங்கள், மூளை, இடுப்பு முறிவு, மற்றும் செவிப்பறை மென்சவ்வு பொருத்துதல் போன்ற சத்திர சிகிச்சைகளுக்குத் தேவையான செலவுகளை மீள்நிரப்புவதற்கும், நீர் மெத்தை, காற்று அமுக்க மெத்தை, கதைப்பதற்கான உபகரணங்கள் போன்ற விசேட வைத்திய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், .குருதிக் கசிவு போன்றவற்றிற்காகவும் மாதாந்தம் ரூபா. 6000/- ஐ விட குறைந்த வருமானம் பெறும் குடும்பமொன்றுக்கு வைத்திய உதவி வேலைத்திட்டத்தின் கீழ் ஆகக்கூடியது ரூபா. 20000/- (இருபதாயிரம்) உதவு தொகை வழங்கப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை பின்வருமாறு வைத்திய உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயனுறுவோர் எண்ணிக்கை	தொகை(ரூ.மி.)
451	**6.19**

5.2.12 பாடநெறிகள்

அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பாக போதிய சேவைகளை இலகுவில் வழங்குவதற்கு அவர்களுடன் தொடர்பாடலினை ஏற்படுத்திக் கொள்வது மிக முக்கியமானது. அவர்களுக்கான பணிகளை விளை திறனாகவும், வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அரச உத்தியோகத்தர்களுக்குச் சைகை மொழி, பிறெய்ல் விஞ்ஞான முறைமை மற்றும் நடமாடுதல் மற்றும் ஏதோ ஒன்றில் ஒருவரை சரியாகப் பழக்கப்படுத்துதல் தொடர்பான வேலைத்திட்ட மொன்று அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டில் மூன்று குழுக்களுக்குப்

பாடநெறி நடாத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக 79 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.2.13 பாதுகாப்பு இல்லத்திற்கு உதவி வழங்குதல்.

குணப்படுத்த முடியாது நோய்வாய்ப்பட்டுள்ள மற்றும் வாழ்நாள் பூராகவும் பராமரிக்கப்பட வேண்டிய அங்கவீனமுற்ற நோயாளர்களைப் பராமரித்து வருகின்ற இராஜகிரிய விக்டோரியா இல்லத்தின் மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்களை செலுத்துவதற்கும், ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் 2014 ஆம் ஆண்டில் ரூபா.7 மில்லியன் ஒதுக்கீடப்பட்டுள்ளது.

5.2.14 விசேட வாய்ப்புக்கள்

அங்கவீன நிலையைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 16 ஆவது வாட்டில் சிகிச்சை பெறுகின்ற குறைந்த வருமானத்தினைக் கொண்ட பக்கவாத நோயாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் சமூக நலன்புரிச் சேவைகளை வழங்குவதனூடாக அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் ஒன்றை வழங்குவதை நோக்காகக் கொண்டு விசேட சேவைகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதனூடாகப் நலன்புரி சேவைகள் மற்றும் உளவளத்துணை சேவைகள் வழங்கப்பட்டு பல நோயாளர்கள் உளரீதியாக ஆறுதலடைந்துள்ளனர்.

06. தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பமேம்பாட்டுத் திட்டம்



6.1 நோக்கம்

தற்போதைய சமூகத்தில் தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தனிப் பெற்றோர்களின் எண்ணிக்கை துரிதகதியில் அதிகரித்துக் கொண்டு செல்கின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. விதவைகள், தபுதாரர்கள் மற்றும் கணவராற் கைவிடப்பட்டவர்கள் தமது வாழ்க்கையினைக் குழந்தைகளுடன் முன்னெடுத்துச் செல்வதிற் பாரிய சவால்களை எதிர்கொள்வதால், அவ்வாறான தனிப் பெற்றாரைக் கொண்ட சிறார்களுக்கு அவர்களது கௌரவம் அல்லது ஆளுமைக்கு எள்ளளவும் பங்கம் ஏற்படாதவாறு பாதுகாத்து அக்குடும்பங்களை சமுதாய மட்டத்தில் உயர்த்துவதற்கு உதவிக் கரம் நீட்டுவதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

6.1.1 பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்.

- பயங்கரவாதச் செயற்பாடுகள், இன மோதல்கள், அவசர விபத்துக்கள், தற்கொலை போன்ற சம்பவங்களின் விளைவாகத் தமது கணவரின் திடீர் மரணம் காரணமாக கைவிடப்பட்ட அநாதரவான பெண்களுக்காகவும் விசேடமாகப் பாடசாலை செல்கின்ற சிறார்களைக் கொண்ட குடும்பங்களுக்காகவும்,

- கணவரினால் மனைவி மற்றும் பிள்ளைகள் கைவிடப்படுதல் அல்லது மனைவியினால் சிறு குழந்தைகளுடன் கணவன் கைவிடப்பட்டுள்ள குடும்பங்களுக்காகவும்,

- சட்டரீதியான முறையில் திருமணமாகாத போதிலும் கல்வி பயிலும் பிள்ளைகள் மற்றும் சிறு குழந்தைகளைக் கொண்ட, அவர்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு எவ்வித வருமானமுமற்ற பிள்ளைகளுடன் தனித்து வாழ்கின்ற பெண்களுக்காகவும்,

மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலின் கீழ்ப் பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது பாலூட்டும் தாய்மார்கள் அல்லது பாடசாலை செல்லும் சிறார்களைக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

2012 குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் பிரகாரம் இலங்கையில் தனியொருவரைத் தலைவராகக் கொண்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 610,945 ஆவதுடன், அதில் 50 வயதிற்கு மேற்பட்ட விதவைக் குடும்பங்களின் எண்ணிக்கை 77,626 ஆகும். 50 வயதிற்குக் குறைந்த விதவைக் குடும்பங்களின் எண்ணிக்கை 441,797 ஆகவும், சட்டரீதியிற் பிரிந்துள்ள 50 வயதிற்கு மேற்பட்ட குடும்பங்களின்

எண்ணிக்கை 8,856 ஆகவும், சட்டரீதியிற் பிரிந்துள்ள 50 வயதிற்குக் குறைந்த குடும்பங்களின் எண்ணிக்கை 9,043 ஆகவும், கைவிட்டுச் சென்ற 50 வயதிற்குமேற்பட்ட குடும்பங்களின எண்ணிக்கை 40,436 ஆகவும், கைவிட்டுச் சென்ற 50 வயதிற்குக் குறைந்த குடும்பங்களின் எண்ணிக்கை 33,186 ஆகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. இவ்வாறு தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுள் சிறு பிள்ளைகள் மற்றும் பெண்களே அதிளவில் நிர்க்கதியாக் கப்பட்டுள்ளனர். இந்நிர்க்கதி நிலை காரணமாக அவர்களுக்கான புகலிடம், பாதுகாப்பு மற்றும் கௌரவம் என்பவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளன. அதற்கு மேலாக சிறார்களின் கல்வி மற்றும் போசனையில் சிக்கல்கள் எழுந்துள்ளதுடன், அவர்கள் பல்வேறு சமூக துஷ்பிரயோகங்களுக்கும் உட்படக்கூடிய நிலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேலும் கல்வி அமைச்சினூடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் பாடசாலை செல்கின்ற வயதினைக் கொண்ட சிறார்களில் 2% வீதத்தினர் பாடசாலைக்குச் செல்லாதவர்கள் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரப் பிரச்சினையே அதற்கான பிரதான காரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.இப் பிரிவில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவர்களாகச் தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள் விளங்குகின்றன.

இந்நிலைமையினைத் தணிப்பதற்குப் பின்வரும் செயற்பாடுகள் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் மேம்பாட்டுக்காக உதவியினை வழங்கி அவர்கள் சுய தொழிலினை முன்னெடுப்பதற்கு வழிவகுத்தல் மற்றும் அதன் தொடர்ந்தேச்சையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- சிறு குழுக்களாக ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படுகின்ற வருமானத்தினைப் பெருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குச் சுயதொழில் உதவிகளை வழங்குதல் அதன் தொடர்ந்தேச்சையான செயற்பாடுகள்.

- தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் தாய்மார்கள்/தந்தைமாரின் பொருளாதார வலுவினை மேம்படுத்துதல், குடும்பத்தின் மேம்பாட்டுக்காக நிறைவேற்ற வேண்டிய பணிகள் மற்றும் சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக அவர்களை விழிப்புணர்வூட்டி அவர்களின் பொருளாதார நிலைமையினை உயர்த்திச் சிறார்களின் கல்வியினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அறிவினை வழங்குதல், அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல் மற்றும் இனங்காணப்பட்டுள்ள அவதானிக்கப்பட

வேண்டிய குடுபம்பங்களுக்கான அமுற்படுத்துதல்.
நிகழ்ச்சித் திட்டங்களை

6.2 பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் - 2014 டிசெம்பர் 31ஆந் திகதி வரை.

நிகழ்ச்சித் திட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை	நிதிசார் ஒதுக்கீடு
தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு சுய தொழில் உதவி வழங்குதல். உதாரணம் - கால்நடைகளை வளர்த்தல், மரக்கறிப் பயிர்ச் செய்கை, ஆடை தைத்தல், நடைபாதையோர வியாபாரம், சில்லறை வியாபாரம், உணவு வகைகளை உற்பத்தி செய்தும் தயாரித்தும் விற்பனை செய்தல் போன்ற கருத்திட்டங்கள்.	588 குடும்பங்கள்	6,562,000.00
தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்ப சிறுகுழுக்களின் சுயதொழில் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள். உதாரணம் - குழுக்களாக ஒன்றிணைந்து கயிறு திரித்தல், ஆடை தைத்தல், கால்நடைகளை வளர்த்தல், தேயிலைப் பயிர்ச் செய்கை, சிற்றுண்டிவகை தயாரித்தல் போன்ற கருத்திட்டங்கள்.	03 நிகழ்ச்சித் திட்டங்கள் 26 குடும்பங்கள்	360,000.00
தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள். • கருத்திட்டங்கள் தொடர்பாக போதிய தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்காக நடாத்தப்பட்டு வருகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள். உதாரணம் - சப்பாத்து உற்பத்தி, யோக்கட் தயாரிப்பு, கைப்பணிப்பொருட்களை உற்பத்தி செய்தல், சிற்றுண்டிவகை தயாரித்தல். • அடையாளங் காணப்பட்டுள்ள கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய குடும்பங்களை ஒன்றிணைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்கள். உதாரணம், குடும்பப் பிளவுகள், விவாகரத்து ஆகியன காரணமாக குடும்பங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். • குடும்ப மேம்பாட்டுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக அவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்.	05 நிகழ்ச்சித் திட்டங்கள் 05 பிரதேச செயலகங்கள் 337 பயனாளிகள்	77,316.00
05 வெளிக்கள கண்காணிப்புக்கள்	02 பிரதேச செய.	684.00
மொத்தம்		**7,000,000.00**

6.2.1 2014 ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியாக பயனடைந்த பயனாளிகள் மற்றும் செலவிடப்பட்ட தொகை



6.2.2 சிறு குழுக்களின் சுய தொழிற் செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு - 2014

மாவட்டம்	பிரதேச செயலகம்	கருத்திட்டம்	கருத்திட்டத்தினை மேற்கொள்ளும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை	ஒதுக்கீட்டின் அளவு
முல்லைத்தீவு	ஒட்டுசுட்டான	கால்நடை வளர்ப்பு	10	150,000.00
களுத்துறை	பாலிந்த நுவர	தேயிலை செய்கை	06	60,000.00
முல்லைத்தீவு	ஒட்டுசுட்டான	கால்நடை வளர்ப்பு	10	150,000.00
மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் செலவினம்			**26**	**360,000.00**

6.2.3 தனிப் பெற்றோர் குடும்பங்களுக்கான சுயதொழில் பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் 2014

மாவட்டம்	பிரதேச செயலகம்	கருத்திட்டம்	ஒதுக்கீட்டின் அளவு
களுத்துறை	பாணந்துறை	தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் அறிவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் - மெழுகுதிரிஉற்பத்தி, சவர்க்கார உற்பத்தி, நுளம்புச் சுருள் உற்பத்தி, நொறுக்குத்தீனி தயாரித்தல்.	22,000.00
புத்தளம்	மஹகும்புக்கட வல	தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்ப அங்கத்தவர்களின் உளப்பாங்கினை மேம்படுத்துதல் மற்றும் பிரிந்து செல்லும் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டம்.	10,000.00
கொழும்பு	மஹரகம	தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் அறிவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் - உள்ளூர் உணவுகளைத் தயாரித்தல், பழப்பாகு மற்றும் பழரசம் தயாரித்தல்	26,000.00
முல்லைத்தீவு	ஒட்டுசுட்டான்	தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்ப அங்கத்தவர்களின் உளப்பாங்கினை மேம்படுத்துதல் மற்றும் பிரிந்து செல்லும் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டம்.	10,750.00
முல்லைத்தீவு	நானாட்டான்	தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் அங்கத்தவர்களின் உளப்பாங்கினை மேம்படுத்தல் மற்றும் பிரிந்து செல்லும் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டம்.	8,566.00.00
செலவிடப்பட்ட தொகை			**77,316.00**

2014 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 7 மில்லியன்

தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்ப அலகுகளில் தொழிலில்லாத நிலைமையினைபோக்கி அவர்களைத் தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக, சமுதாயத்திற்கு பங்களிப்பினை நல்கக்கூடிய நபர்களாக உருவாக்குவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

07.சிசுனன புபுதுவ நிகழ்சித் திட்டம்



7.1 அறிமுகம்

சமூக சேவைகள் அமைச்சின் விடயப்பரப்பு பரந்துபட்ட பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியதாகும். தற்போது காணப்படுகின்ற சமூகப் பிரச்சினைகளின் தன்மை துரித கதியில் மாறுபடுவதன் காரணமாகவும், முன் நிகழ்ந்திராத சமூகப் பிரச்சினைகள் தற்போது புதிது புதிதாக தோன்றுவதன் காரணமாகவும் இவ்வமைச்சிடம் அடிக்கடி பல்வேறு வகையான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்றன.

நாட்டின் எதிர்காலம் சிறார்களின் கரங்களிலே தங்கியுள்ளதனால் அவர்களின் அறிவுவிருத்தியை நோக்காகக் கொண்டு அமைச்சின் அபிவிருத்திப் பிரிவினால் "சிசுநென புபுதுவ" சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், விசேட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாக அமுற்படுத்தப்பட்டு வருகின்றது. எல்லா வகையிலும் துரிதமாக பின்னடைவு கண்டுள்ள அதாவது, சமூக பழக்க வழக்கங்கள், சமூக பண்பாடுகள் என்பனவற்றை சிறார்களின் மனதிலே ஆழப் பதிய வைப்பதனூடாக அவர்களின் வாசிப்புப் பழக்கம், ஆற்றல் மற்றும் கற்பனா சக்தியினை வளமூட்டி நாட்டிற்கும், சமூகத்திற்கும் தான் பின்பற்றுகின்ற மதத்திற்கும் பற்றுள்ள படைப்பாற்றல் மிகு சந்ததியொன்றை உருவாக்குவதே சிசுநென புபுதுவ நிகழ்ச்சித் திட்டத்தின் முற்றுமுழுதான நோக்கமாகும்.

இலங்கையிலுள்ள கஷ்டப் பிரதேச செயலகப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து ரூபா 50,000/- பெறுமதியான நூல் தொகுதியொன்ற்றை (உருக்கிலான அலுமாரியுடன்) வழங்குவதனூடாக இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப் படுவதுடன், இதன் போது அப்பிரதேசத்தில் உள்ள பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்து அவர்கள் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

7.2 ஆரம்பிக்கப்பட்ட வாசிப்பு நிலையங்கள் - 2014 ஆண்டு டிசெம்பர் 31 வரை

மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	கி.அ.பிரிவு/ இடம்
கண்டி	உடபளாத்த பாத்தஹேவாஹெட்ட	கலத அமுஹேன மயிலபிட்டிய
அம்பாறை	தெஹியத்தகண்டிய	சந்தனகம
ஹம்பாந்தோட்டை	வீரக்கெடிய தங்காலை	ஹப்புகம்பொத்த பொலன்னறுவை
இரத்தினபுரி	கஹவத்தை	மடலகம குடியேற்றம்
மாத்தளை	யட்டவத்தை	மதலாபிட்டிய
கேகாலை	அரனாயக்க	திப்பிட்டிய
குருணாகலை	ரஸ்னாயகபுர நிக்கவரெட்டிய மாஸ்பத்த	கடிகவ வந்துரெஸ்ஸ வில்கம்தெமட்டாவ சியம்பலாண்டுகமுவ
பொலன்னறுவை	லங்காபுர	புலஸ்திகம
நுவரெலியா	வலப்பனை	அலகொலவெவ
கம்பஹா	ஜா-எல தொம்பே	பங்டிகொட கயுகஸ்வத்தை
மொனராகலை	சியம்பலாண்டுவ	லியன்கொல்ல

பதுளை	சொரணதொட்ட	புதுகே கந்த
ஹம்பாந்தோட்டை	அம்பலாங்கொடை	கிவுல
அநுராதபுரம்	நொச்சியாகம	அம்பகஸ்வெவ
யாழ்ப்பாணம்	வலிகாமம் - தெற்கு	ஈவினை

08. சமூக பராமரிப்பு நிலையம்

பணிக்கூற்று

'சமூகநல பராமரிப்புடன் கூடிய பொறுப்புமிகு சமுதாய மொன்றினை உருவாக்குதல்'

8.1 நோக்கம்

சமூகப் பராமரிப்பு நிலையம் /சமூகப் பராமரிப்பு அலகு என்பவற்றுக்கு வருகை தரும் சேவைநாடுநர்களுக்குப் பரந்துபட்டதும், இணைந்ததுமான சமூக நலன்புரிச் சேவையொன்றினை வழங்குதல்.

இலங்கைக்கு பாரிய அழிவினை உருவாக்கிய சுனாமிப் பேரலையின்போது சிதைந்துபோன குடும்ப முறைமையினை மீளவும் பழைய நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக அப்போதைய சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சினால் இலங்கையிற் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேச செயலகங்களிற் சமூகப் பராமரிப்பு நிலையங்களை தாபிப்பது தொடர்பாக 2005.12.07 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சமூகப் பராமரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்னவெனில், "சேவை பெறுநர்களுக்கு சிநேகபூர்வமான சூழலைக் கட்டியெழுப்பு வதனூடாகச் இணைந்த மற்றும் முழுமொத்த சேவைகளையும் வழங்குவதாகும்". இந் நிலையங்களினால் அனைத்து நலன்புரித் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படுவதனால் பாதிக்கப்பட்டவர்களை பிரதான அபிவிருத்தி நீரோட்டத்தில் ஒன்றிணைக்க முடிகின்றது.. ஆரம்ப காலகட்டத்தில் சமூகநலப் பராமரிப்பு நிலையங்கள் பிறிதாக தாபிக்கப்பட்ட போதிலும், தற்போது அந் நிலையங்களுக்குப் பதிலாக பிரதேச செயலகங்களினுள் அலகொன்றாக தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இக் கருத்திட்டம் சமூக சேவைகள் அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டல் அமைச்சு மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து அமுற்படுத்தப்படுகின்றது. அதற்கமைய இச் செயற்திட்டத்தின் கீழ், அந்நிறுவனங்களின் சமூக சேவை உத்தியோகத்தர்கள் (மத்திய அரசாங்க/மாகாண சபை), சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

உளவளத்துணை உதவியாளர்கள், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவியாளர்கள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் மற்றும் நிவாரணம் வழங்கும் உத்தியோகத்தர்கள் போன்ற உத்தியோகத்தர்களாற் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கு மேலதிகமாக நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் உத்தியோகத்தர்களும் சேவையினை வழங்கி வருகின்றனர்.

கருத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து 2008 ஆம் ஆண்டிறுதி வரை யுனிசெப் மற்றும் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆகியனவற்றின் அனுசரணையின் கீழ் 27 பிரதேச செயலகங்களிற் சமூகநலப் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2008 ஆண்டின் பின்னர் சமூகநல பராமரிப்பு நிலையங்களுக்குப் பதிலாக பிரதேச செயலகங்களினுள் அலகொன்றாக தாபிக்க ஆரம்பித்துள்ளது.

இது வரை சேவைபெறுநரை மையமாகக் கொண்டு நபர்களுக்கிடையே சேவைகள் வழங்கப்பட்டதற்குப் பதிலாக உரிய கள உத்தியோகத்தர்களினால் இச் சமூகநல எண்ணக்கருவினை உபயோகித்துக் குடும்பத்தினை மையமாகக் கொண்ட இணைந்த சேவைகளை வழங்கும் பொருட்டு,அவர்களது அறிவு மற்றும் திறன் விருத்தி என்பனவற்றை விருத்திசெய்வது இச் செயற்திட்டத்தின் பிரமான இலக்காகும்.

இதுவரையில் தாபிக்கப்பட்டுள்ள சமூகநல பராமரிப்பு நிலையங்கள் / அலகுகளின் எண்ணிக்கை 113 ஆகும்



8.2 2014 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

8.2.1 திறைசேரி ஒதுக்கீடு - ரூபா. 5 மில்லியன்

8.2.1.1 கொள்திறன் வேலைத்திட்டங்கள்

இதன் கீழ் 2014 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதம் வரையில் 02 கொள்திறன் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 03 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டக் கள உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட கொள்திறன் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பண்டாரகம, மில்லனிய மற்றும் மதுராவல பிரதேச செயலகங்களின் 29 கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளதுடன் அதற்கான செலவு ரூபா. 36,635/- ஆகும். களுத்துறை மாவட்டத்தின் பேருவளை மற்றும் களுத்துறைப் பிரதேச செயலகங்களின் 24 கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய கொள்திறன் வேலைத்திட்டத்திற்கான செலவு ரூபா. 24,620/- ஆகும். பொலன்னறுவை மாவட்ட கள உத்தியோகத்தர்களுக்காக இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வு வேலைத்திட்டத்தில்47 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளதுடன் அதற்கான செலவினம் ரூபா. 53,210/- ஆகும். மாத்தறை மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் தொடர்பாக 40 உத்தியோத்தர்கள் பங்குபற்றியுள்ளதுடன் அதற்கு செலவு செய்யப்பட்ட பணம் ரூபா. 40,020/- ஆகும். காலி மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 37 அலுவலர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றதுடன், அந் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ரூபா 31,875 செலவிடப்பட்டது.

8.2.1.2 சமூகநல பராமரிப்பு அலகுகளை நிர்மாணித்தல்

பின்வரும் பிரதேச செயலகங்களின் சமூகநல பராமரிப்பு அலகுகளை அமைப்பதற்கு 2014 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாத முடிவின்போது ஒன்றிணைந்த நிதியத்தின் ஒதுக்கீடுகளில் இருந்து ரூபா. 1,060,637.18 செலவு செய்யப்பட்டுள்ளது.



தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் 13 சமூகநல பராமரிப்பு நிலையங்களின் நிர்வாக மற்றும் பேணல் செலவினங்களுக்கு 2014டிசெம்பர் மாத இறுதிவரை ரூபா. 2.432 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது.

8.2.1.3 கணினிகள் வழங்கல்

பொலன்னறுவை மாவட்டத்தின் லங்காபுர, தமன்கடுவ, திம்புலாகல, வெலிகந்த, ஹிங்குரக்கொட, மெதகிரிய, எலஹெர மற்றும் கேகாலை மாவட்டத்தின் ருவன்வெல்ல, தெஹியோவிட்ட, மாவனெல்லை, யட்டியாந்தோட்டை மற்றும் தரணியாகலை ஆகிய பிரதேச செயலகங்களில் நிலவுகின்ற சமூகநல பராமரிப்பு அலகுகளின் பயன்பாட்டிற்காக கணினிகள் வழங்கப்பட்டமை தொடர்பாக ரூபா 1.153 மில்லியன் செலவிடப்பட்டது.

8.2.2 யுனிசெப் நிதியம் - ரூபா. 8.71 மில்லியன்

2014டிசெம்பர் மாதம் வரை சமூகநல பராமரிப்பு செயற்திட்டம் தொடர்பாக ரூபா. 8.715 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 4,371,150 தொகை சமூகநல பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைக்கப் பெற்றுள்ளதுடன் 4,344,150/ உளநல சமூக நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

8.2.2.1 உளநல சமூக அலுவலர்களை நியமித்தல்

வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் உளநல சமூகப் பிரச்சினைகளுக்கு போதிய உளவளத்துணை மற்றும் பிற இடையீடுகள் தொடர்பாக 2014 ஆண்டில் 14 உளநல சமூக உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சம்பளமாக ரூபா 2,732,000 செலவிடப்பட்டுள்ளது.

8.2.2.2 உளநல சமூக அலுவலர்களுக்கான செயலமர்வுகள்

உளநலசமூகபராமரிப்பு அலுவலர்களின் கொள்திறன் விருத்தி தொடர்பாக 01 பயிற்சி செயலமர்வும் அவர்களுக்கான மேம்பாட்டு நிர்வாக கூட்டமும் நடாத்தப்பட்டுள்ளன. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 202,053.62 ஆகும்.

8.2.2.3 கொள்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.

சமூகநல பராமரிப்புக் செயற்திட்டத்துடன் தொடர்புடைய வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குச் சமூகப் பராமரிப்பு எண்ணக்கரு மற்றும் பயன்பாடு தொடர்பான 04 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. அதற்கான செலவினம் ரூபா. 293,787.50 ஆகும். 207 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளனர். அதற்கு மேலதிகமாக அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டம், அம்பாறை மாவட்டத்திலுள்ள 07 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள (சிங்கள மொழி) 42 வெளிக்கள உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது. அதற்கான செலவினம் ரூபா. 70,861.20 ஆகும். மேலும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 04 பிரதேச செயலகங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மேலும் ஒரு பயிற்சி வேலைத்திட்டம் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதில் 56 பேர் பங்குபற்றியுள்ளனர். அதற்கான செலவினம்

ரூபா. 107,047.20 ஆகும். அவ்வாறே மாத்தளை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட சமூகநல பராமரிப்பு உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் 20அங்கத்தவர்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது. அதற்கான செலவினம் ரூபா. 11,725.00 ஆகும், சமூகநல பராமரிப்பு செயற்திட்டத்துடன் தொடர்புடைய வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு சமூகநல பராமரிப்பு எண்ணக்கரு மற்றும் பயன்பாடு குறித்த நடைமுறை வேலைத்திட்டம் ஒன்று மொனராகலை மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்டது. அதற்கான செலவினம் ரூபா 26,620 ஆகும். 79 அலுவலர்கள் கலந்து சிறப்பித்தனர். எண்ணக்கரு மற்றும் பயன்பாடு தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்களில் சமூகப் பணியினை அறிமுகஞ் செய்தல், விடய முகாமைத்துவம், விடயக் கருத்தரங்கு, குடும்பக் குழு கருத்தரங்கு மற்றும் அறிக்கையிடுதல் போன்ற தலைப்பின் கீழ் உத்தியோகத்தர்கள் விழிப்புணர் ஊட்டப்பட்டுள்ளனர்.

8.2.2.4 பிரதேச செயலாளர்களை விழிப்புணர்வூட்டுதல்.

இந்நிகழ்ச்சித் திட்டம், கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் 40 பேரின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டுள்ளது. அதற்கான செலவினம் ரூபா. 116,565 ஆகும்.

8.2.2.5 பாதிக்கப்பட்டவர்களுகான உபகரணங்களை வழங்குதல்

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்கள் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் தமன, தெஹியத்தகண்டிய, லாகுகல, மஹஒய, பதியத்தலாவ மற்றும் உகன போன்ற பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய 40 பிரதேச செயலகங்களின் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உடனடி நிவாரண உதவியாக பிரதேச செயலகமொன்றுக்கு ரூபா. 5000 வீதம் மொத்தம் ரூபா. 200,000 வழங்கப்பட்டுள்ளது.

8.2.2.6 சமுதாயத் தலைவர்கள் மற்றும் ஏனைய வெளிக்கள அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்

இதன் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் சமுதாயத் தலைவர்கள் மற்றும் ஏனைய வெளிக்கள அலுவலர்களினால் சமூகப் பராமரிப்பு நிலையங்களினால் நிறை வேற்றுகின்ற சேவைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக ரூபா. 10,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக ரூபா. 200,000/- செலவிடப்பட்டுள்ளது.

8.2.2.7 சமூகநல பராமரிப்பு அலகுகளை தாபித்தல்.

2014 ஆம் ஆண்டினுள் சமூகநலப் பராமரிப்பு அலகுகளை நிர்மாணிப்பதற்கு யுனிசெப் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வருமாறு நிதியிடப்பட்டுள்ளது.



8.2.2.8 உபகரணங்கள் வழங்கல்

சமூகநல பராமரிப்பு அலகுகளின் பயன்பாட்டிற்காக கண்டி மாவட்டத்தின் அக்குரணை, உடபலாத்த, உடுநுவர, கங்கவட்டகோரள, பன்வில, பஸ்பாகே கோரள, பாத்ததும்பர, யட்டிநுவர ஆகிய 08 பிரதேச செயலகங்களுக்கும், கண்டி மற்றும் மாத்தளை தலைமையக சமூக சேவை அலுவலர்களுக்கும் கணனிகள், கணனி மேசைகள், அச்சியந்திரம், கணனிக் கதிரைகள் வழங்கப்பட்டன. மேலும், ருவான்வெல்ல, பதுளை மற்றும் மொனராகலை தலைமையக சமூக சேவை அலுவலர்களுக்கும் (வளவாளர்கள்) 03 மடிக்கணனிகள் வழங்கப்பட்டன.

இச் செயற்திட்டத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பயிற்சியளித்தல்களினதும் இறுதி அடைவு என்னவெனில், கிராமிய மட்டங்களில் சேவைநாடுநர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதை உறுதிசெய்வதாகும். அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள அலுவர்கள் வெவ்வேறாக நாடுபூராகவும் பரந்துபட்டுக் காணப்படும் பாதிக்கப்பட்டுள்ள சேவை பெறுநர்களுக்கு சேவைகளை வழங்கும் போது முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினைகள், பலவீனங்கள் மற்றும் வளங்களின் விரயம் என்பனவற்றினை இனங்கண்டு, சமூகநல பராமரிப்பு அலகுகள் மூலம் இணைந்த சேவைகளை வழங்குவதனூடாக தவிர்த்துக்கொள்ள முடிவதுடன், வினைத்திறன் மற்றும் விளைதிறன் வாய்ந்த சேவைகளை வழங்க முடிந்துள்ளமை பற்றி தொடர்ந்தேச்சையான நடவடிக்கைகளின் போது அவதானிக்கப்பட்டுள்ளன

திறனைக்காணும் மற்றும்
பயிற்சி நிலையம்

09.சமூக சேவைகள் திணைக்களம்

பணிக்கூற்று

"சமூகத்தில் அனுகூலங்கள் கிட்டாத நிலைக்குள்ளானவர்களுக்கு அவசியமான சேவைகளை வழங்குதல் மற்றும் வலுவூட்டுதலினூடாக அவர்களைத் தேசிய அபிவிருத்தியிற் செயலாற்றும் பங்குதாரர்களாக ஆக்குதல்"

9.1 அறிமுகம்

- அங்கவீனமுற்றோருக்கு சமவாய்ப்புக்களை வழங்குவது தொடர்பாக பொறுப்புக் கூறுதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் தொழிற்திறன்களை மேம்படுத்துதல் மற்றும் அவர்களைச் சுதந்திரமான பிரஜைகளாக மாற்றுதல்.
- விசேடதேவையுடைய சிறார்கள் தொடர்பாகமுன்கூட்டியே இடையீடு செய்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளை வழங்குகின்ற உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்கினை உயர் தரம் கொண்டதாக மேம்படுத்தல்
- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளை வழங்குகின்ற தன்னார்வ அமைப்புக்களை வலுவூட்டுதல்.

9.1.1 செயற்பாடுகள்

- அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சுயதொழிலுக்கான தொழில் உபகரணங்களை வழங்குதல் மற்றும் திறந்த தொழிலுக்கான வாய்ப்பினை வழங்குதல்.
- விசேட தேவையுடைய சிறார்களை முன்கூட்டியே இடையிடுவதனூடாக அவர்களை ஒன்றிணைத்து கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.
- சேவைகளை வழங்குகின்ற உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளை மேம்படுத்துவதற்கு பயிற்சி திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- செவிப்புலனற்றோருக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குவதனூடாக செவிப்புலனற்றவர்களின் அன்றாட நடவடிக்கைகளை இலகுவாக்குதல்
- பாதுகாவலரற்ற மூளைவளர்ச்சி குன்றிய ஆண் சிறுவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரிச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்ற தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- 60 வயதிற்குக் குறைந்த விழிப்புலனற்றவர்களுக்கு பார்வையினை பெற்றுக்கொடுப்பதற்கான கண்வில்லைகளை வழங்குதல் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குதல்.

- விழிப்புலனற்ற சிறுவர்களுக்கு விளையாட்டு, கல்வி மற்றும் கலாசார உதவிகளை வழங்குதல்.
- சமுதாய அடிப்படையிலான ஒன்றிணைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச மட்டங்களில் அங்கவீனமுற்றோருக்கு தேவையான சேவைகளை வழங்குவதனூடாக அவர்களை வலுவூட்டுதல்.

9.1.2 சமூக சேவைகள் திணைக்களத்தின் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்



9.2 நிதிசார் முன்னேற்றம்(2014.12.31 திகதியளவில்)





9.2.1 மீண்டுவரும் செலவினங்களின் முன்னேற்றம் (2014.12.31 திகதியளவில்)

	ஒதுக்கீடுகள் (ரூபா)	செலவினம் (ரூபா)	சதவீதம்
ஏனைய மீண்டுவரும் நிகழ்ச்சித் திட்டங்கள்	26,912,500	26,862,913	99.81%
வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களை நவீன மயப்படுத்தும் கருத்திட்டம்	100,000,000	88,466,798	88.46%

9.2.2 2014 ஆண்டின் செயலமர்வுகள் மற்றும் பயிற்சித்திட்டங்கள்

மொத்த ஒதுக்கீடு-ரூபா. 2.727மில்லியன் செலவு - ரூபா.2.726மில்லியன்

தொ. இல	நடாத்தப்பட்ட செயலமர்வுகள்	திகதி மற்றும் இடம்	பங்குபற்றியோர் எண்ணிக்கை
01	வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களின் கொள்திறன் நிகழ்ச்சித் திட்டம்.	2014.01.06/07 ஊவா முகாமைத்துவப் பயிற்சி நிலையம் - பஸ்ஸறை.	75
02	வட மத்திய மாகாணக் கூட்டம்	2014.01.21 மாகாகண சமூக சேவைகள் அமைச்சின் கேட்போர்கூடம்.	65

03	மத்திய மாகாணக் கூட்டம்	2014.01.23 கெட்டவல வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனம்.	120
04	தென் மாகாணக் கூட்டம்	2014.01.24 வெலிகாமம் பி.செ. கேட்போர்கூடம்.	180
05	இயற்கை அப்பியாசப் பயிற்சி செயலமர்வு	2014.02.12 மாதிவல கலாசார நிலையம்	150
06	வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் அலுவலர்களுக்கான நிதிப் பிரமாணம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் செயலமர்வு	2014.02.13 சமூக சேவைகள் திணைக்களம்.	40
07	ஊவா மாகாணக் கூட்டம்	2014.02.20 ஊவா மாகாண சுகாதார அமைச்சு கேட்போர் கூடம்	100
08	.தேசத்திற்கு மகுடக் கண்காட்சிக்கு நிகராக முன்பள்ளி ஆசிரியர்க்களுக்கான பயிற்சிப் பாடநெறி (6 மாதம்)கோட்பாட்டு பயிற்சி	2014.02.22/23/24, கிராம அபிவிருத்தி நிலையம், படகமுவ, குருனாகலை	29
09	எமது அழகான குடும்பம் நிகழ்ச்சித் திட்டம்	லுணுகமவெஹர பி.செ. 2014.02.22/23	60
10	அபிவிருத்தி அலுவலர்களுக்கான விழிப்புணர்வூட்டும்ஒருநாள் செயலமர்வு	2014.02.28 தலாகேன சமுதாய நிறுவகம்	135
11	சப்பிரகமுவ மாகாணக் கூட்டம்	2014.03.07 கச்சேரிக் கட்டடம், இரத்தினபுரி.	100
12	கிழக்கு மாகாணக் கூட்டம்	2014.03.14 பிரதேச சபை, திருகோணமலை.	115
13	மேல் மாகாணக் கூட்டம்	2014.03.17 கொழும்பு மாவட்ட செயலகம்	150
14	விசேட தேவைகளைக்கொண்ட மாணவர்களை ஒன்றிணைக்கும் கல்வி குறித்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வு	2014.04.04/05 கொலன்னாவ பி.செ.	120
15	போதனாசிரியர்களின் கடமை தொடர்பான இருநாள் செயலமர்வு	2014.04.07/08 சமூக சேவைகள் திணைக்களம்.	55
16	சைகை மொழி செயலமர்வு	2014.05.09/10/23/24/30/31 2014.06.06/07 சமூக சேவைகள் திணைக்களம்.	13
17	கொரியா கல்விச் சுற்றுலா	2014.07.06 இலிருந்து 19 2014.09.28 இலிருந்து 10-28	16
18	குடும்பக் கொள்கை தயாரித்தல் தொடர்பான செயலமர்வு	2014.08.29 சமூக சேவைகள் திணைக்களம்.	14
19	மேல் மாகாண முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	2014.09.02 சமூக சேவைகள் திணைக்களம்.	37
20	பராமரிப்பாளர் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு	2014.12. 29 சமூக சேவைகள் திணைக்களம்.	22

21	.சிங்களமொழிப் பயிற்சி	அரச கரும மொழிகள் திணைக்களம். (06 மாத)	01
22	வாகன முகாமைத்துவப் பயிற்சி	ICTAD நிறுவகம் (05 நாட்கள்)	01
23	கணனி டிப்ளோமா பாடநெறி	SLIDA நிறுவகம் (06 மாத)	01

9.2.3 அங்கவீனமுற்ற நபர்களுக்கான வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களைப் நவீனமயப்படுத்தல் - 2014 ஆண்டின் முன்னேற்றம்

தொ. இல	செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் (ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (ரூபா)
01	விடுதிகள் உட்பட கட்டிடங்களை நவீனமயப்படுத்தல்	47,242,900	45,652,320.43
02	இயந்திரப் பொறித் தொகுதிகளைப் பழுதுபார்த்தல்.	500,000	188,571.43
03	நூலகப் புத்தகங்கள்	475,000	464,505.50
04	விளையாட்டு உபகரணங்கள்	2,000,000	774,885.00
05	தளபாடங்களின் கொள்வனவு	20,382,237	20,768,778.40
06	இயந்திரப் பொறித்தொகுதி மற்றும் பயிற்சி உபகரணங்கள்	24,411,363	18,017,926.16
07	அப்பியாச அலகு தொடர்பான உபகரணங்கள்	2,500,000	72,640.00
08	உள்ளக விளையாட்டரங்கு உபகரணங்கள்	2,488,500	2,300,760.00
09	நிர்வாகச் செலவுகள்	-	226,410.50
	மொத்தம்	**100,000,000**	**88,446,797.42**

9.2.4 2014 ஆண்டிற்கான ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

இல	செயற்பாடுகள்	ஒதுக்கீடு (ரூபா)	செலவினம் (ரூபா)
1	சமூக சேவைகள் திணைக்களத்தின் மற்றும் தன்னார்வ வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு 633 அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளை வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.	24,000,000	22,425,862/
2	104 விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளை ஒன்றிணைத்து சேவைகளை வழங்குதல்.		
3	வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை நிறைவு செய்த 145 பேருக்கு உபகரணங்களை வழங்குதல்.		
4	93 பேருக்கு செயற்கைக் கை மற்றும் கால்கள் வழங்குதல்.		
5	சமூக சேவைகளை வழங்கி வருகின்ற 06 அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்.		
6	விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான 05 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல்.		
7	பயிற்சியினை நிறைவு செய்த 82 பயிலுநர்களைத் தொழில் வாய்ப்புக்களுக்கு அனுப்புதல்.		
8	செவிப்புலனற்றோருக்கான 445 சைகைமொழி சேவை தவணைகளை வழங்குதல்		
9	செவிப்புலனற்ற 464 பேருக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குதல்.		

- புவக்பிட்டிய, ஜயவிரு செவன நிறுவகத்தினால் பொறுப்பாளர்கள் மற்றும் பெற்றோர்களை இழந்த மனவளர்ச்சி குன்றிய 47 பிள்ளைகளுக்கு விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவகத்தின் இயலளவினை 100 வரை அதிகரிப்பதற்கு இரு கட்டங்களாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், முதல் கட்ட நிர்மாணப் பணிகள் இவ் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- மேலும் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகிய 33 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர்.

9.2.5 சிறுவர் வழிகாட்டற் செயற்திட்டம்

சிறுவர் ஒருவரின் வளர்ச்சியில் ஏதாவது சிக்கலொன்று அல்லது தாமதமொன்று ஏற்பட்டுள்ளது எனச் சந்தேகமின்றி அறிந்துகொள்ளும் வேளையில் அல்லது அங்கவீனம் ஏற்பட்டுள்ளது என அடையாளங் கண்டு கொண்டதன் பின்னர் நாடவேண்டிய இடம் சிறுவர் வழிகாட்டல் நிலையம் ஆகும். பெற்றோர்களின் மனநிலையை மேம்படுத்துதல், சிறுவர்களின் வளர்ச்சிக்காக முற்கூட்டியே இடையீடு செய்தல், ஆரம்பகட்ட சேவைகளை வழங்குதல், போதிய சுகாதாரம், முன் பிள்ளைப் பருவம், கல்வி மற்றும் நலன்புரிச் சேவைகளை ஒருங்கிணைக்கும் பொறுப்புக்களை வகிக்கின்ற அரச துறையைச் சார்ந்த நிறுவனம் இதுவாகும். மஹரகம, நாவின்ன பிரதேசத்தில அமைந்துள்ள இச் சிறுவர் வழிகாட்டி நிலையம் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்றது.

இச் செயற்திட்டத்தின் கீழ் சேவைகள் வழங்கப்படும் பிள்ளைகள் சிறந்தவாறு வளர்ச்சியடைந்ததன் பின்னர், விசேட பாடசாலைகள், விசேட கல்வி அலகுகள் மற்றும் சாதாரண பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர்.

வழங்கப்படுகின்ற சேவைகள்

1. சிறுவர்களை மேம்படுத்துவதற்காக சிறு பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்களுக்கு வகுப்புக்கள்/ பிரத்தியேக வகுப்புக்கள்/ குழு வகுப்புக்களை நடாத்துதல்
2. உடற் சிகிச்சை/ வாழ்க்கைத் தொழிற் சிகிச்சை/ பேச்சுப் பயிற்சி ஆகிய சேவைகளை வழங்குதல்.
3. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறி.
4. பெற்றோர்களின் உளநிலை மேம்பாட்டு உளவளத்துணை ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள்.
5. சுகாதார சிகிச்சைகள் இவ்வருடத்தில் சிறுவர் வழிகாட்டல் நிலையத்தினால் விசேட தேவைகளைக் கொண்ட 104 சிறுவர்களுக்கு உடற்பயிற்சிச் சிகிச்சை, கல்வி மற்றும் ஏனைய சேவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 252 பெற்றோர்களுக்கு உளவளத்துணைச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. வளர்ச்சி எய்திய 22 சிறுவர்கள் சாதாரண முன்பள்ளிகளுக்கும், 37 பேர் சாதாரண பாடசாலைகள் மற்றும் விசேட அலகுகளுக்கும், ஒருவர் விசேட பாடசாலைக்கும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் சில பிரதேசங்களுக்கு இச் செயற்த்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ளன.

9.2.6 விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

செயற்பாடுகள்	ஒதுக்கீடு (ரூ)	செலவினம்(ரூ.)	பயனாளிகள்
விளையாட்டு உதவிகள்	100,000.00	100,000.00	விழிப்புலனற்ற கிரிக்கட் குழு
புனர்வாழ்வு உதவிகள்	1,050,000.00	1,044,127.00	39 போதனாசிரியர்கள்
கல்விசார் உதவிகள்	1,350,000.00	1,380,324.00	பல்கலைக்கழகம் - 53 உயர் தரம்- 10 கட்புலனற்ற பெற்றோர்களின் கட்புலனினைக் கொண்ட பிள்ளைகள் - 135
நிர்வாக செலவினம்	900,000.00	857,502.00	
கண் வில்லைகள் மற்றும் கண் சிகிச்சைகள்	1,290,000.00	1,272,972.61	123வில்லைகள்
விழிப்புலனற்ற மகளிருக்கான நலன்புரி நிலையம்.	239,500.00	233,929.30	6 பேர்
வாழ்க்கைத் தொழிற் பயிற்சி	160,500.00	160,500.00	03 போதானாசிரியர்கள்
கணக்காய்வுக் கட்டணம்	25,500.00	22,176.60	
நிதிசார் செலவினம்	25,000.00	3,397.80	
நானாவித செலவினம்	520,000.00	518,192.00	நயனாலோக்ககமவில் 18 வீடுகளின் கூரைகளின் பழுதுபார்த்தல் மற்றும் குழாய் குடிநீர் முறைமையை மேம்படுத்தல்.

9.2.7 அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாயஅடிப்படையிலான புனர்வாழ்வு வேலைத்திட்டம் - CBR

9.2.7.1 நோக்கம்

"அங்கவீனமுற்ற நபர்களின் தேசியக் கொள்கைக்கு அமைய அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அந்நபர்களின் ஆற்றல்கள் மற்றும் திறமைகளைத் தற்போதுள்ள சமூகப் பொருளாதார முறைமையினூடாகத் தேசிய அபிவிருத்திக்கு நல்கி, அவர்களின் பொறுப்பு மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமானவாறு அவர்களின் அறிவு, திறன்களை வலுவூட்டுதல் மற்றும் அவர்களைச் சமுதாயத்திற்கு ஒன்றிணைப்பதற்காகத் தற்போதுள்ள சமூக அபிவிருத்தி வேலைத்திடங்களினூடாக வாய்ப்புக்களை உருவாக்குதல்".

9.2.7.2 பின்னணி

அங்கவீனமுற்றவர்களும் சமூகத்திற் சம அந்தஸ்துள்ள அங்கத்தவர்களாவதுடன், சமுதாயத்தில் அவர்களுக்குச் சமமான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதுடன், அவர்களுக்குப் பக்கபலமாக அமையும் பொதுக்கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்பு, நுழைவு வசதிகள், நலன்புரி மற்றும் பிற தேவைகளின் போது நிலவுகின்ற கட்டமைப்பினுள் ஏனையவர்களுக்கு வழங்கப்படுவதனைப் போன்று சமமான விதத்தில் வழங்கப்பட வேண்டும் என்பது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சகவாழ்வுக்கான உரிமையாகும்.

அங்கவீனமுற்ற சகல பிரஜைகளும் அவர்களின் உரிமைகளை அனுபவிப்பதற்கும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் ஏற்றவகையில் மேம்படுத்துதல், அவர்களுக்கு சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அவர்களைச் சமூகத்தில் ஒன்றிணைப்பதற்காகச் சமுதாய அபிவிருத்தியினுள் உள்ளடக்கப்படும் செயற்பாட்டினைச் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு என வரைவிலக்கணப்படுத்த முடியும். பிற வேலைத்திட்டங்களிற் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய ரீதியிற் பல்வேறு மட்டங்களிற் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் வளவாளர்களை உள்ளடக்கிய செயற்பாட்டுக் குழுக்கள்தாபிக்கப்பட்டுள்ளதுடன், அங்கவீனமுற்ற நபர், அக்குடும்பங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கியவாறு பிரதேச மற்றும் மாவட்ட ரீதியான சுய உதவி அமைப்புக்கள் நிறுவப்பட்டு அவர்கள் வலுவூட்டப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவுகளிலும் மனித வள மேம்பாடு மற்றும் எதிர்மறை உளப்பாங்குகளை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

9.2.7.3 செயற்பாடுகள்

1. அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அக்குடும்பங்களில் உள்ளவர்களின் அறிவு, உளப்பாங்குகள் மற்றும் செயற்பாடுகளினை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

2. வீடு, சமூகம், முன்பள்ளி, பாடசாலை, பல்கலைக்கழகம், அலுவலகம் போன்றவற்றில் சுயமாகத் தமது கடமைகளை மேற்கொள்ளக்கூடிய நபரொருவராக உருவாக்குதவற்கு அன்றாடச் செயற்பாட்டுப் பயிற்சியினை வழங்குதல்.

3. ஒன்றிணைப்பு கல்வி முறைமை மற்றும் விசேட கல்வி முறைமையினூடாக இவ் அங்கவீனமுற்ற சிறார்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலும் ஏனைய சேவைகளில் ஈடுபடுத்தலும்.

4. பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்காக தொழில் அமைச்சு மற்றும் பிரத்தியேகப் பிரிவுகளுடன் இணைந்து தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழில்களுக்காக முன் ஆயத்தத்தினை மேற்கொள்ளுதல்.

5. பிரதேச மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களினூடாக தொழிற் பயிற்சியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

6. ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களில் காணப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களில் அங்கவீனமுற்ற நபர்களை ஒன்றிணைத்து நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல் - (விளையாட்டு மற்றும் கலாசாரம் போன்ற)

7. பல்வேறு சமய,கலாசார மற்றும் சமுக நிகழ்வுகளில் உயிர்ப்புடன் பங்குபற்றச் செய்தல்.

9.2.7.4 இது தொடர்பாக கையாளப்பட்டுள்ள உத்திகள்.

- அமைச்சுக்களிடயே மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கிடையே அமைக்கப்பட்ட தேசிய செயற்குழுக்களை இற்றைவரைப்படுத்துதல்.
- தேசிய செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் சீ.பீ.ஆர் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ஐந்து வருடத் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கைகளை எடுத்தல்.
- அனைத்து மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் மாவட்டக் குழுக்களை இயங்கச்செய்து இலங்கையில் அங்கவீனம் தொடர்பான தேசியக் கொள்கையினை அமுற்படுத்துவதற்கான அறிவினை இற்றைவரைப்படுத்துதல்.
- அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றுகின்ற சமூக சேவை உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் போன்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் அட்டவணைப்படுத்தல் சம்பந்தமான சீ.பீ.ஆர் நிகழ்ச்சித் திட்டங்களின் புதிய அணுகுமுறை தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல்.

- பிரதேச மட்டத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களை ஒன்றிணைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- பிரதேச செயலகப் பிரிவு மட்டங்களிற் கிராமியத் தலைவர்களுக்கான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான சுயசக்தி அமைப்புக்களை நிறுவுதலும் வலுவூட்டுதலும்.
- அங்கவீனமுற்ற நபர்களின் பெற்றோர்களுக்கான அமைப்புக்களை நிறுவுதலும் விழிப்புணர்வூட்டுதலும்.
- தன்னார்வத் தொண்டர்களின் பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்.
- மாகாண உதவி உத்தியோகத்தர்களுக்கு வெளிக்களப் பயிற்சி செயலமர்வு மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- சைகை மொழி இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாதலால், சைகை மொழி தொடர்பாக உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்.

9.2.7.5 பௌதீக முன்னேற்றம் - சி.பீ. ஆர். வேலைத்திட்டம் (2014 ஆம் ஆண்டு)

சி.பீ. ஆர். நிகழ்ச்சித் திட்டம் -2014 பௌதீக முன்னேற்றம்		
1	வீட்டு மட்டத்தில் புனர்வாழ்வளித்தல்	7163
2	சமூகமயப்படுத்தல்	2104
3	முன்பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை	583
4	சாதாரணப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை	386
5	விசேட பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை	553
6	சிகிச்சைப் பயிற்சி சேவைகளுக்கு அனுப்புதல்	3919
7	வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு அனுப்புதல்	1486
8	தொழில் வாய்ப்புக்கு அனுப்புதல்	585
9	சுயதொழிலுக்கு அனுப்புதல்	2907
10	நேரடிப் பயன்களைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை	115
11	சுய உதவிக் குழுக்களை வலுவூட்டல்	780

9.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

1. KOICA செயற்திட்டம்

2013 - 2015 கால வரையறையினுள் கொரியாவின் KEAD நிறுவனத்தினுடாக வழங்கப்பட்டு வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 17 உத்தியோகத்தர்களுக்கு கொரியா நாட்டில் பயிற்சியளிக்கப்பட்டது.

2. திரிசவிய கருத்திட்டம்

உலக வங்கி உதவியின் கீழ் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம் மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் அமுற்படுத்தப்பட்டு வரும் திரிசவிய நிகழ்ச்சித் திட்டத்தின் அங்கவீனமுற்ற நபர்களுக்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் இற்றை வரையான முன்னேற்றம் பின்வருமாறு,

தொ இல.	கருத்திட்டம்	நிறுவனம்	பாடநெறி	காலம்	பயிலுனர்கள் தொகை	ஒப்பந்ததொகை ரூபா.மி.	செலவு ரூபா.மி.
01	மன்னார்	அங்கவீனமுற்ற நபர்களுக்கான அமைப்பு, மன்னார் (MARDAM)	மெழுகுதிரி மற்றும ஊதுபத்தி தயாரிப்பு	6	20	3.3	1.3
02	யாழப்பாணம்	அங்கவீனமுற்ற நபர்களைப் புனர்வாழ்வளிப்பதற்கான அமைப்பு (AROD)	வூல் அலங்காரப் பணி மற்றும் காற் துடைப்பம் உற்பத்தி	6	20	2.6	0.8
03	கிளிநொச்சி	தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்	கையடக்கத் தொலைபேசி பழுதுபார்த்தல் மற்றும் ஆடை தைத்தல்.	6	20	5.4	2.4
04	வவுனியா	வன்னி அங்கவீனமுற்ற நபர்களுக்கான புனர்வாழ்வு அமைப்பு	தோல் உற்பத்தி	6	20	2.6	0.5
		அங்கவீனமுற்ற நபர்களுக்கான புனர்வாழ்வு அமைப்பு	கிரபிக் டிசைன்	6	15	2.2	0.8
05	அனுராதபுரம்	சமூக சேவைகள் திணைக்களம், வட மத்திய மாகாணம்.	கையடக்க தொலைபேசிபழுது பார்த்தல்	6	15	5.7	1.1
			நாற்று மேடைகள்	6	15		
			கைப்பணி உற்பத்தி	6	15		

06	பொலன்னறுவை	மலைநாட்டு சமூக மற்றும் பொருளாதார நிலையம்	கைப்பணி உற்பத்தி	6	20	2.3	0.5
07	முல்லைத்தீவு	சமுதாய அபிவிருத்தி அமைப்பு	ஆடை தைத்தல்.	6	15	3.8	-
			மின் இணைப்பு	6	15		
08	புத்தளம்	Child Vision Sri Lanka	ஆடை தைத்தல்.	6	20	5.3	1.1
			கையடக்கத் தொலைபேசி பழுதுபார்த்தல்.	6	20		
09	திருகோணமலை	கிண்ணியா தொழில்நுட்ப நிறுவனம்	ஆடை தைத்தல்.மற்றும் கைப்பணி உற்பத்தி	6	20	2.6	0.5
மொத்தம்						**35.9**	**9.0**

- திரிசவிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திரண்ட நிதியத்திலிருந்து மீதியாகும் ஒதுக்கீட்டின் கீழ் அமுணுகும்புர மற்றும் தெலம்புயாய வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களை விரிவுபடுத்தும் புதிய நிர்மாணக் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு இவ்வருடத்தில் முடிந்தமை.
- இலங்கை பூராவும் உள்ளடங்கும் வகையில் சேவை வழங்குநர்களின் அறிவு விருத்தி தொடர்பான 10 வேலைத்திட்டங்கள் நெறிப்படுத்தப் பட்டுள்ளதுடன், அதில் 04 வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. (147 அலுவலரகள் கலந்துகொண்டுள்ளனர்)

9.4 2014ஆம் ஆண்டின் விசேட வேலைத் திட்டங்கள்.

- இத் திணைக்களத்தின் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்கள் தொடர்பாக 2014.04.24 ஆந் திகதி பெலவத்தை புத்ததாஸ விளையாட்டரங்கில் வெளியார் நிறுவனங்களின் நிதிசார் பங்களிப்புடன் புதுவருட வைபவத்தினை நடாத்தியமை.
- உலக சுகாதார அமைப்பின் நிதிசார் அனுசரணையுடன் சமூக சேவைகள் திணைக்களத்தின் சகல வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மூன்று நாட்களைக் கொண்ட அதாவது 2014.08.21-23 ஆந் திகதிகளில் களுத்துறை மாவட்டச் செயலகத்திலும் பஸ்துன்ரட்ட கல்வியற் கல்லூரியிலும் செயல்விருத்தி செயல்மர்வு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. அது தொடர்பாக 462 உத்தியோத்தர்கள் பங்குபற்றியதுடன் அதற்கான கிரயம் ரூபா. 1,955,347.00 ஆகும்.

10. தேசிய சமூக அபிவிருத்தி நிலையம்

பணிக்கூற்று

"எல்லா சமூக மட்டத்திலும் பணியாற்றக்கூடிய நிபுணத்துவமிக்க சமூகப் பணியாளர்களை பயிற்றுவிப்பதன் மூலம் சமூக அபிவிருத்திக்கு தேவையான மனிதவளமேம்படுத்தல், சமூகப்பணி தொடர்பான நவீன அறிவு மற்றும்நுட்பங்களை விருத்திசெய்து பரவலாக்குவதன் ஊடாக சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்திக்கு இன்றியமையாத சிறப்பான சேவையை வழங்குவதே எமது பணிக்கூற்று ஆகும்".

இலங்கையில் சமூகப்பணிக்கல்வியை வழங்கும் ஒரேயொரு நிறுவனமாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் திகழ்கின்றது. இலங்கையில் சமூக அபிவிருத்திக்காக பல்வேறு பாடநெறிகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. சமூகப்பணிப்பாடத்தை மையமாகக் கொண்டு நாட்டுக்குத் தேவையான சமூகப்பணிமற்றும் சமூகநலன்புரி துறைகளில் தொழில் வாண்மையாளர்களை உருவாக்குவதே இந்நிறுவனத்தின் பிரதான குறிக்கோளாகும்.

10.1 அறிமுகம்

இந்நிறுவகம் சமூகசேவைகள் அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுவதுடன் இலங்கையில் சமூகஅபிவிருத்தி மற்றும் சமூகநலன்புரி செயற்பாடுகளுக்கு தேவையான தொழில் வாண்மையான சமூகப்பணியாளர்களை உருவாக்கிவரும் முன்னோடி சமூகப்பணிக் கல்வி நிறுவனமாகும். 1992 ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நிறுவனச்சட்டத்தின் மூலம் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தாபிக்கப்பட்டது.

இதுதவிர 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகச்சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ்பட்டம் வழங்கும் உயர்கல்வி நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2005ஆம் ஆண்டில் இலங்கை சனநாயக சோசலிச குடியரசினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதந்துரையின் பேரில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் பட்டம் வழங்கும் உயர்கல்வி நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டதுடன் சமூகப்பணித்துறையில் இளமாணிப்பட்டம் வழங்க ஆரம்பித்தது. 2008ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தினால் சமூகப்பணி முதுமாணிப் பாடநெறியை ஆரம்பிப்பதற்கான விஷேட வர்த்தமானி மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் இலங்கையில் முதன்முதலாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பட்டப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

10.2 நிறுவனக் கட்டமைப்பு

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நிர்வாக சபையானது நிர்வாக அதிகாரத்தைப் பெற்றுள்ளதுடன் அதன் கீழ் கல்வி செயற்பாட்டுச்சபை சகல கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகவும் செயற்படுகின்றது .நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பிரிவுகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

1. இலங்கைசமூகப்பணிக்கல்லூரி
2. பயிற்சிப்பிரிவு
3. சமூக அபிவிருத்திக் கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவு
4. நிர்வாகமற்றும்நிதிப்பிரிவு

10.3சமூகப்பணிக் கல்லூரியின் செயலாற்றமும், முன்னேற்றமும்

10.3.1 இந்த வருடத்தில் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளுக்காக புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளல்

சமூகப்பணி டிப்ளோமா (DSW) கற்கைநெறி / சமூகப்பணி உயர்டிப்ளோமா (HDSW), சமூகப்பணி இளமானி (BSW) கற்கைநெறி (தமிழ் / சிங்களம் / ஆங்கில மொழிமூலம் (2014/2018)

சமூகப்பணி டிப்ளோமா (DSW) கற்கைநெறி, சமூகப்பணி உயர்டிப்ளோமா (HDSW), சமூகப்பணி இளமானி கற்கைநெறிகளுக்காக (BSW) ((தமிழ் / சிங்களம் / ஆங்கில மொழிமூலம்) விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதி வாய்ந்த 57 பேர் சிங்கள மொழிமூலமும், 40 பேர் தமிழ்மொழி மூலமும், 67 பேர் ஆங்கில மொழிமூலமும் மொத்தமாக 164 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதுடன், கற்கை நெறியானது 2014.07.01ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

தொ. இல.	நிகழ்ச்சித்திட்டம் /விபரம்	பயனுறுவோர் எண்ணிக்கை	காலம்
01.	சமூகப்பணி முதுமாணி கற்கைநெறி (2013/2015) - (ஆங்கிலமொழிமூலம்)	20	2013.09.13 - 2015.09.13
02.	சமூகப்பணி இளமாணி கற்கைநெறி (2010/2014)- (ஆங்கிலமொழிமூலம்)	42	2010.07.05 - 2014.06.30
03.	சமூகப்பணி இளமாணி கற்கைநெறி(2011/2015)- (ஆங்கிலமொழியில்)	47	2011.07.04 - 2015.06.30
04.	சமூகப்பணி இளமாணி கற்கைநெறி(2012/2016)- (ஆங்கிலமொழிமூலம்)	39	2012.08.08 - 2016.06.30

05.	சமூகப்பணிடிப்ளோமா / சமூகப்பணிஉயர்டிப்ளோமா / சமூகப்பணி இளமாணி (2013/2017) சிங்கள மொழி மூலம்	57	2013.07.30 - 2017.06.30
06.	சமூகப்பணி டிப்ளோமா /சமூகப்பணி உயர் டிப்ளோமா/ சமூகப்பணி இளமாணி (2013/2017) தமிழ் மொழிமூலம்	47	2013.07.30 - 2017.06.30
07.	சமூகப்பணி டிப்ளோமா /சமூகப்பணி உயர் டிப்ளோமா/ சமூகப்பணி இளமாணி (2013/2017) ஆங்கில மொழிமூலம்	43	2013.07.30 - 2017.06.30
08.	சமூகப்பணி டிப்ளோமா /சமூகப்பணி உயர் டிப்ளோமா/ சமூகப்பணி இளமாணி (2014/2018) சிங்கள மொழிமூலம்	57	2014.07.30 - 2018.06.30
09.	சமூகப்பணி டிப்ளோமா /சமூகப்பணி உயர் டிப்ளோமா/ சமூகப்பணி இளமாணி (2014/2018) தமிழ் மொழிமூலம்	47	2014.07.30 - 2018.06.30
10.	சமூகப்பணி டிப்ளோமா /சமூகப்பணி உயர் டிப்ளோமா/ சமூகப்பணி இளமாணி (2014/2018) ஆங்கில மொழிமூலம்	43	2014.07.30 - 2018.06.30
11.	பெண்களும்அரசியல் வலுவூட்டலும் டிப்ளோமா பாடநெறி (2013/2014) (தமிழ் மொழிமூலம்)	60	2013.07.27 – 2014.07.27

10.3.2 சமூகப்பணிக் கல்லூரியூடாக வெற்றிகரமாக நடாத்தப்பட்ட கற்கைநெறிகள்

அ. 2009/2013 சமூகப்பணி இளமாணி கற்கை நெறியை பூர்த்தி செய்து 2014.02.18ம் திகதி பட்டமளிப்பு விழாவில் 41 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டது.

ஆ. 20010/2014 சமூகப்பணி இளமாணி கற்கை நெறி பூர்த்தியாக்கப் பட்டுள்ளதுடன் பெறுபேறுகள் சில தினங்களில் வெளிவரவுள்ளன.

இ. 2011/2013 சமூகப்பணி முதுமாணி கற்கை நெறியின் 3ம் குழு வெற்றிகரமாக பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துள்ளதுடன் 2014/02/18ம் திகதி பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டது. அதில் ஐவர் (05) முதுமாணிப் பட்டம் பெற்றனர்.

ஈ. சமூகப்பணி டிப்ளோமா, பெண்களும் அரசியல் வலுவூட்டலும் டிப்ளோமா, உளவளத்துணை டிப்ளோமா ஆகிய டிப்ளோமா பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்த 339 பேருக்கு 2014 ம் ஆண்டு ஜூன் மாதம் 04 ம் திகதி டிப்ளோமா வழங்கும் வைபவம் நடைபெற்றது.

10.4 பயிற்சிப்பிரிவின் செயலாற்றுகை மற்றும் முன்னேற்றம்

10.4.1 உளவளத்துணை தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி

தொ. இல	நிகழ்ச்சித் திட்டம்	பங்குபற்றுநர் தொகை	நிலையம்	காலம்
01	உளவளத்துணைடிப்ளோமா 2012/2014 (தமிழ்மொழிமூலம்)	52	சாந்தியகம் யாழ்ப்பாணம்	18 மாதம்
02	உளவளத்துணைடிப்ளோமா 2013/2014 (தமிழ்மொழிமூலம்)	16	தலாவை பயிற்சி நிலையம்	18 மாதம்
03	உளவளத்துணைடிப்ளோமா 2013/2014 (சிங்கள மொழிமூலம்)	28	தலாவை பயிற்சி நிலையம்	18 மாதம்

04	உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி 2013/2014 முதலாவது குழுவினர் (சிங்களமொழிமூலம்)	55	சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு திணைக்களம்	09 மாதம்
05	உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி இரண்டாவது குழுவினர் 2013/2014 (சிங்களமொழிமூலம்)	56	சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு சேவைகள் திணைக்களம்	09 மாதம்
06	உளவளத்துணை டிப்ளோமா 2012/2014 (சிங்கள மொழிமூலம்)	50	மாகாண சபை அலுவலகம் வாரியபொல	18 மாதம்
07	உளவளத்துணை டிப்ளோமா 2013/2015(சிங்களமொழிமூலம்)	55	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	21 மாதம்
08	உளவளத்துணை டிப்ளோமா 2013/2015 (தமிழ்மொழிமூலம்)	62	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	21 மாதம்
09	உளவளத்துணை டிப்ளோமா 2013/2015 (தமிழ்மொழிமூலம்)	58	இப்ஸ் ஸ்ரீ லங்கா, மட்டக்களப்பு	18 மாதம்
10	உளவளத்துணை டிப்ளோமா 2013/2015 (சிங்கள மொழிமூலம்)	35	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் அம்பாறை பயிற்சி நிலையம்	18 மாதம்
11	உளவளத்துணை டிப்ளோமா 2013/2015 (தமிழ்மொழிமூலம்)	31	தொழில்நுட்பக் கல்லூரி, அம்பாறை, அக்கரைப்பற்று	18 மாதம்

12	உளவளத்துணை டிப்ளோமா - யாழ்ப்பாணம் ((மகளிர் விவகார அமைச்சு) 2013/2015 (தமிழ்மொழிமூலம்)	61	மாவட்டசெயலகம் நல்லூர்	18 மாதம்
13	உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (மகளிர் விவகார அமைச்சு) 2013/2015 (சிங்கள மொழிமூலம்)	62	தலாவை பயிற்சி நிலையம்	18 மாதம்
14	உளவளத்துணை டிப்ளோமா - கொழும்பு முதலாவது குழு (மகளிர் விவகார அமைச்சு) 2013/2015	51	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், நாவலை கிளை	18 மாதம்
15	உளவளத்துணை டிப்ளோமா - கொழும்பு இரண்டாவது குழு (மகளிர் விவகார அமைச்சு) 2013/2015	45	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், நாவலை கிளை	18 மாதம்
16	உளவளத்துணை டிப்ளோமா - பொலிஸ் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்காக) 2013/2015	48	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், நாவலை கிளை	18 மாதம்
17	உளவளத்துணை டிப்ளோமா - 2014/2015 (தமிழ்மொழிமூலம்)	45	கச்சேரி, கிளிநொச்சி	18 மாதம்
18	உளவளத்துணை டிப்ளோமா - 2014/2015 (தமிழ்மொழிமூலம்) 2014/2015	50	இப்ஸ் ஸ்ரீ லங்கா, மட்டக்களப்பு	21 மாதம்
19	உளவளத்துணை டிப்ளோமா - 2014/2015 (தமிழ்மொழிமூலம்)	41	ஆசிரியர் பயிற்சி நிலையம், கிளிநொச்சி	18 மாதம்

10.4.2 புதிய டிப்ளோமாப் பாடநெறிகள்

இல	நிகழ்ச்சி	பங்குபற்றுநர் தொகை	நிலையம்	காலம்
01	முதியோர் பராமரிப்பு டிப்ளோமா- 2014/2015	20	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	18 மாதம்
02	உளவளத்துணை உயர் டிப்ளோமா - 2014/2016(சிங்களம், தமிழ்மொழிமூலம்)	27	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	21 மாதம்
03	சமூக பராமரிப்பு டிப்ளோமா	23	இரட்சிப்புப்படைதலைமையகம்	18 மாதம்

10.4.3 பிற வேலைத்திட்டங்கள்

தொ. இல	நிகழ்ச்சித்திட்டம்	பங்குபற்றுநர் தொகை	நிலையம்	காலம்
01	உளவளத்துணை தொடர்பான தொழில்வாண்மையாளர்களின் ஒன்றுகூடல் I	உளவளத்துணை தொடர்பான 33 தொழில்வாண்மையாளர்கள்	ஹர்ட்டி நிறுவனம்	01நாள்
02	உளவளத்துணை தொடர்பான தொழில்வாண்மையாளர்களின் ஒன்றுகூடல் II	உளவளத்துணை தொடர்பான 25 தொழில்வாண்மையாளர்கள்	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	01 நாள்
03.	திவிசரிய நிகழ்ச்சித்திட்டம் 3 பயிற்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன	சமூக சேவைகள் அமைச்சின் 90 உத்தியோகத்தர்கள்	தலாவை பயிற்சி நிலையம்	03 நாள்
04.	உலக வங்கி அனுசரணையுடனான திவிசரிய நிகழ்ச்சித்திட்டம் (புதிய)	சமூக சேவைகள் அமைச்சின் 400 உத்தியோகத்தர்கள்	மாவட்ட ரீதியாக நடைபெறும்	03 நாள்

4.4.4 குறுங்காலப் பயிற்சித்திட்டங்கள்

இல	நிகழ்ச்சித்திட்டம்	பங்குபற்றுநர் தொகை	நிலையம்	காலம்
01.	செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பான குறுங்கால பயிற்சித்திட்டம்	ஹோமாகமை பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - 41	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	02 நாள்
02.	நிறுவக முரண்பாடு தொடர்பான குறுங்கால பயிற்சித்திட்டம்	கொட்டவெஹர பிரதேசசெயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்- 60	கொட்டவெஹர பிரதேச செயலகம்	02 நாள்
03.	தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறன் விருத்தி தொடர்பான குறுங்கால பயிற்சித்திட்டம்	போக்குவரத்து சபையின் உதவி முகாமையாளர்கள் - 40	போக்குவரத்துச் சபையின் விரிவுரை மண்டபம் நாராஹேன்பிட்டிய	03 நாள்
04.	அடிப்படை உளவியல் உளவளத்துணை தொர்பான குறுங்கால பயிற்சித்திட்டம்	வவுனியா மாவட்ட ஆசிரியர்கள் -40	வலயக் கல்விக் அலுவலகம், புளியங்குளம்	02 நாள்
05.	நெருக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் அடிப்படை உளவியல் உளவளத்துணை தொடர்பான குறுங்கால பயிற்சித்திட்டம்	பொலிஸ் குற்ற பதிவு பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் - 40	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	05 நாள்
06.	சமூக அபிவிருத்திக்காக தொழில்வாண்மையான ஊடகவியலாளர்களின் பொறுப்பு மற்றும் கடமை	ஊடகவியலாளர்கள் - 36	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	02 நாள்

10.5 சமூகஅபிவிருத்திக் கொள்கை, ஆய்வுமற்றும்வெளியீட்டுப்பிரிவின் செயலாற்றுகை மற்றும் முன்னேற்றம்

10.5.1 முடிவுறுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்ட்டங்கள்

- **ஆய்வு முன்மொழிவு பத்திரம் தயாரித்தல் தொடர்பான இரு நாள் செயலமர்வு**

  தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் அனைத்து கல்விசார் ஆளணியினர் தொடர்பாகஆய்வு முன்மொழிவு பத்திரம் தயாரித்தல் பற்றி விழிப்புணர்வூட்டும் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை 2014.05.29 மற்றும் 2014.05.30 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்டது.

- **செய்தித் தாள்** (News Letter - 2014)

  தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் செய்தித்தாள் குருநாகலையில் நடாத்தப்பட்ட 2014 தெயட்ட கிருல தேசிய நிகழ்வின்போது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நோக்கில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- **ஊடக வட்டம் ஒன்றினை ஆரம்பித்தல்**

  தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல், நிறுவகத்தினை பிரசித்தப்படுத்தல் எனும்நோக்கில் ஊடகப் பிரிவொன்றினை உருவாக்குதல். நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பாடநெறிகள் என்பன தொடர்பான ஊடக பிரசாரத்தை வழங்குதல். 2014-07-31, 2014-08-01 ஆகிய இரு தினங்களில் பயிற்சிப் பிரிவுடன் இணைந்து சமூக அபிவிருத்திக்காக தொழில்சார் ஊடகவியலாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டமை மற்றும் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் தொடர்பாக நிறுவன தலைவர்களை பங்குபற்றச் செய்தமை.

10.5.2 முன்னெடுக்கப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

- **இலங்கையில் குடும்பக் கொள்கை தயாரிப்பதற்காக மேற்கொள்ளும் ஆய்விற்கு பங்களிப்பு செய்தல்**

  சமூக சேவைகள் அமைச்சுடன் இணைந்து தேசிய குடும்பக் கொள்கையை தயாரிப்பதற்காக சமுதாய பங்களிப்பினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கொழும்பு, குருநாகலை, அநுராதபுரம், மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

- **போதைப்பொருள்தவிர்ப்புதொடர்பாகசமூகப்பணியாளர்களின்தலையீடுதொடர்பான டிப்ளோமா பாடநெறி**

  இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்வதுடன் அதனை குறைத்தல் மற்றும் போதைப் பொருள் கட்டுப்படுத்தல் தொடர்பாக பணியாற்றுகின்ற உளவளத்துணை உத்தியோகத்தர்களின் அறிவு விருத்தி தொடர்பாக இப்பாடநெறியை வடிவமைத்தல்.

- **சமூகப்பணிதொடர்பான கலைச்சொல் அகராதி**

  தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், சமூகப்பணி தொடர்பான பட்டப்பின் படிப்பு, பட்டப் படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை நடாத்தி வருவதுடன் சமூகப்பணி பாடத்துடன் தொடர்பான கலைச்சொல் அகராதியின் தேவையினை பூர்த்தி செய்வதற்காக இது தயாரிக்கப்படுகின்றது.

- **சமூகவிஞ்ஞானபாடநெறிக்காகஆய்வு முறையியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி**

  சமூக விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபடுகின்ற ஆய்வாளர்கள் மற்றும் ஆய்வு உத்தியோகத்தர்களுக்கான ஆய்வு முறையியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறியை ஆரம்பித்தல்.

10.6 நிர்வாக மற்றும் நிதிப் பிரிவின் செயலாற்றுகை

10.6.1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கென புதிய கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கென நிலையான கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக சமூக சேவைகள் அமைச்சுக்கு சொந்தமான சீதுவையில் அமைந்துள்ள காணியில் 2.1493 ஹெக்ரயார் அளவான (5ஏக்கர், 01ரூட்,9. 8பர்ச்சஸ்)பகுதி பெறப்பட்டுள்ளது. இப் புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவுப் பத்திரம் மற்றும் செலவு மதிப்பீடு என்பனவற்றுக்கு தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

10.6.2 ரண்ண பிரதேச பயிற்சி நிலையம் ஆரம்பித்தல்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாடநெறிகளை கிராமப்புறங்களுக்கும் கொண்டு செல்லும் நோக்கில் பிராந்திய பயிற்சி நிலையங்களை ஆரம்பித்தல். ஏற்கெனவே அநுராதபுர மாவட்டத்தில் தலாவை மற்றும் அம்பாறை மாவட்டத்தில் பிராந்திய பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மூன்றாவது பிராந்திய பயிற்சி நிலையமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரண்ண பிரதேசத்தில் 2014/11/05 ஆந் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

10.6.3 பெண் மாணவிகளுக்கான விடுதி வசதிகள்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கு சொந்தமான களனியில் அமைந்துள்ள பெண்கள் விடுதி சமூகப்பணி டிப்ளோமா, உயர் டிப்ளோமா, இளமாணி பட்டகற்கைநெறிகளை தொடர்கின்ற (சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிமூல) 20 மாணவிகளுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, அம் மாணவிகளுக்கு2014/10/27 ம் திகதி முதல் விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

10.6.4 தலாவை பிராந்திய பயிற்சி நிலைய திருத்த வேலைகள்

தலாவை பிராந்தியப் பயிற்சி நிலையத்தின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

10.6.5 புதிய கணக்கீட்டுப் பொதி (பக்கேஜ்) ஒன்றினை அறிமுகம் செய்தல்.

நிறுவகத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் கணக்குப் பிரிவுக்கு இக் கணக்கீட்டுப் பொதியினை கொள்வனவு செய்தமை

10.6.6 நிறுவனத்தின் உள்ளக பதவி உயர்வுகள் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்

நிறுவகத்திலுள்ள அனைத்து பிரிவுகளிலும் பதவி உயர்வு பெறுவதற்கு தகுதி பெற்றிருந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன் நிலவிய ஏனைய வெற்றிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

10.6.7 நூலக வசதிகள்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நூலகமானது 15,000இற்கு மேற்பட்ட சமூகப்பணி தொடர்பான பாடநூல்களையும் வெளியீடுகளையும் கொண்டுள்ள இலங்கையில் காணப்படுகின்ற மிகப்பெரிய சமூகப்பணி வள நிலையமாகும். இந்நூலகத்தில் காணப்படும் நூல்கள் தொடர்பான தகவல்களை கணினிமயப்படுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளது.

10.6.8 ஆங்கிலமொழிகற்பித்தல்நிகழ்ச்சித்திட்டம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் சமூகப்பணி டிப்ளோமா, உயர் டிப்ளோமா, இளமாணிப் பட்டம் ஆகிய கற்கைநெறிகளை தொடர்கின்ற (சிங்கள/ தமிழ் / ஆங்கில மொழிமூல) மாணவர்களின் ஆங்கிலமொழி விருத்திக்காக வகுப்புகள் நடைபெறுகின்றன. இளமாணிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட முன்னர், ஒரு மாதகாலம் ஆங்கிலமொழி விருத்தி தொடர்பாக துரித பாடநெறியொன்று (Intensive Course) நடாத்தப்படுகின்றது. அனுவபம் வாய்ந்த தகுதியும், திறமையும் கொண்ட ஆங்கில போதனாசிரியர்கள் இதற்கென ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாணவர்கள் கற்கை நெறியினை சிறப்பாக தொடரும் பொருட்டு பாடநூல்களை பயன்படுத்துவதற்கும், ஏனைய கற்கைத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்து கொள்வதற்கும் ஏற்றவகையில் மாணவர்களின் ஆங்கிலமொழித் திறனை விருத்தி செய்வது இவ் ஆங்கிலமொழி பாடநெறியின் நோக்கமாகும். சமூகப்பணி டிப்ளோமா, உயர் டிப்ளோமா, இளமாணிப் பட்டம் ஆகிய கற்கைநெறிகளை தொடர்கின்ற மாணவர்களுக்கு அவரவரது மொழித் தேர்ச்சி மட்டங்களை அடைந்துகொள்வதற்கு இவ் ஆங்கிலமொழி கற்கைத் திட்டம் பெரிதும் துணைபுரிகின்றது.

10.7 நிதிசார் முன்னேற்றம்- 2014



11.முதியோர்களுக்கான தேசிய செயலகம்

பணிக்கூற்று

"முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு மற்றும் கௌரவத்தினை உறுதிப்படுத்துதல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்களிப்பினை உணர்த்துதல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்"

11.1 அறிமுகம்

இலங்கை வாழ் முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு மற்றும் அபிமானத்தை வென்றெடுப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அவர்களை ஊக்குவிப்பது மட்டுமல்லாது முதியோர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் என்பன இவ் அலுவலகத்தின் நோக்காகும். இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கின்ற சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தினாற் தேசிய முதியோர் செயலகத்தினூடாக இந்நிறுவனத்திற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனூடாக இலங்கையிலுள்ள முதியோர்கள் தொடர்பாக அமுற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு

11.2 செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம்

11.2.1 கிராமிய முதியோர் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்

சட்டத்தின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள கிராமிய மட்ட முதியோர் குழுக்கள்/ பிரதேச மட்ட அதிகாரமளிக்கப்பட்ட அமைப்புக்கள் / மாவட்ட மட்ட முதியோர் அமைப்புக்கள் மற்றும் மாகாண மட்ட முதியோர் அமைப்புக்களுக்கு நிதி அனுசரணையினை வழங்கி அவற்றினைக் கண்காணித்தல். இதன் கீழ் ஆண்டிறுதியில் 1026 கிராமிய முதியோர் குழுக்களுக்கு ரூபா 5000 வீதம் ரூபா 5.49 மில்லியன் தொகையும், 26 பிரதேச அதிகார சபைகளுக்கு குழுக்களுக்கு ரூபா 7500 வீதம் ரூபா 0.195 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளன.

11.2.2 கண்வில்லைகள் மற்றும் செவிப்புலக் கருவிகளை வழங்குதல்

60 வயதினைத் தாண்டிய குறைந்த வருமானம் பெறுகின்ற சிரேஷ்ட பிரஜைகளுக்குத் தேவையான கண்வில்லைகள்/செவிப்புலக் கருவிகள் போன்ற உபகரணங்களை வழங்குதல். அதன் கீழ் இவ் ஆண்டின் இறுதியில் 3573 பேருக்கு கண் வில்லைகளும்,133 பேருக்குசெவிப்புலக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக செலவிடப்பட்ட மொத்தச் தொகை ரூபா 8.475 மில்லியன்ஆகும்.

11.2.3 முதியோர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்குதல்

60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குதல்.அதன் கீழ் இவ் ஆண்டின் இறுதியில் 10978 பேருக்கு ரூபா 0.512 மில்லியன் செலவிடப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

11.2.4 நூல் வெளியீடு

முதுமைப் பருவத்தை ஆரோக்கியமாக கழிப்பதற்குத் தேவையான விடயங்கள் உள்ளடங்கிய நூற்களை வெளியிடல் மற்றும் அவற்றை அவர்களிடையே பகிர்ந்தளித்தல்.

11.2.5 ஓய்வுக்கு முன்னரான வேலைத் திட்டங்களை நடாத்துதல்.

முதியோர் உளப்பாங்கினை மேம்படுத்துவதற்கு உளவளத்துணைச் சேவைகளை வழங்குதல், ஓய்வெடுக்கின்ற வயதினை எட்டிக் கொண்டிருக்கின்ற அனைத்துப் பிரிவுகளிலும் கடமையாற்றுகின்ற ஊழியர்களின் ஓய்வு வாழ்க்கையினை பயனுறு வகையில் கழிப்பதற்காக அமுற்படுத்தப்பட்டு வருகின்ற ஓய்வு பெறுவதற்குத் தயாராகின்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் முதுமைப் பருவத்திற்காளாகி நோய்வாய்ப்படும் முதியோர்களைப் பாதுகாப்பதற்காக தாதியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வீட்டுப் பராமரிப்பு சேவைப் பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல். அதன் கீழ் இவ் ஆண்டிறுதியில் 310 பிரதேச செயலகங்களில் மேற்படி

நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 4.005 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

11.2.6 முதியோர் பராமரிப்புச் சபையினைப் பேணல்

சட்டத்தின் 24 ஆவது பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபைக்கு, அனாதரவான நிலைமைக்கு உட்பட்டுள்ள பெற்றோர்களை அனுப்பி அவர்களுக்கான பராமரிப்புத் தொகையை வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அதன் பிரகாரம் இவ்வாண்டின் இறுதியில் கிடைக்கப் பெற்ற 116 கோரிக்கைகளுள்84இற்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காகச் ரூபா. 0.984மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

11.2.7 முதியோர்களுக்கான கொடுப்பனவு ரூபா. 1000/-

70 வயதினைத் தாண்டிய இலங்கைவாழ் முதியோர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிச் சேவைகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு 2012 பாதீட்டுப் பிரேரணையின் கீழ்க் குறைந்த வருமானமுடைய சிரேஷ்ட பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா. 1000/- வீதம் வழங்கப்படும் பொதுசன உதவி நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைத்தல். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ் ஆண்டிறுதியில் 240555 பயனாளிகளுக்கு ரூபா2886.66 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

11.2.8 மதியநேர முதியோர் பராமரிப்பு நிலையங்களை பேணல்

தனிமையிலேயே வீட்டில் வாழ்கின்ற முதியோர்களை ஒன்றுதிரட்டி அவர்களை அன்றாட வாழ்க்கைக்குப் பழக்கப்படுத்திக் கொள்வதற்காக முதியோர் பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்கு நிதியினை வழங்குதல். அந் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குதலும் அவற்றினைக் கண்காணித்தலும்.இதன் கீழ் இவ் ஆண்டிறுதியில் 79 மதிய நேர முதியோர் பராமரிப்பு நிலையங்கள் தொடர்பாக ரூபா. 1.796 செலவிடப்பட்டுள்ளது.

11.2.9 முதியோர் இல்லங்களை பதிவுசெய்தல்

2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கத்தைக் கொண்ட திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நாடுபூராவும் பரந்துபட்டு காணப்படுகின்ற முதியோர் இல்லங்களை பதிவுசெய்தல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்

11.2.10 முதியோர் இல்லங்களுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.

நாடுபூராவும் பரந்துபட்டு காணப்படுகின்ற முதியோர் இல்லங்கள் தொடர்பாக மூலதன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதியினை வழங்குதல். இதன் கீழ் இவ் ஆண்டிறுதியில் 05முதியோர் இல்லங்கள் தொடர்பாக ரூபா 5.375 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

11.2.11 முதியோர் தாபரிப்பு நிகழ்ச்சித்திட்டம்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தனவந்தர்களின் நன்கொடைகளைச் உரியவாறு முகாமைத்துப்படுத்தி இடம்பெற்று வருகின்ற முதியோர் தாபரிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தலைமைத்து வத்தினை வழங்குதல். இதன் கீழ் 49 பயனாளிகளுக்கு ரூபா. 0.171 மில்லியன் நிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 08 பயனாளிகளுக்கு நன்கொடையாளர்களின் விருப்பத்தின்படி ரூபா 800 வீதம் வழங்கப்படுகின்றது.

11.2.12 தேசத்திற்கு மகுடம் - 2014

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 2014 நடாத்தப்பட்ட கால வரையறையினுள் ஒவ்வொரு நாளும் முதியோர் கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் முதியோர்களின் கைப்பணி, ஆக்கங்கள் என்பவற்றை காட்சிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு கென ரூபா. 225,004 செலவிடப்பட்டது.

உள்ளகக் கணக்காய்வு
பிரிவு

12. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

12.1 அறிமுகம்

சமூக சேவைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவு பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் கீழ் இயங்குவதுடன், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நேரடியாக அமைச்சின் செயலாளருக்குப் நி.பி. 134(1) இன் பிரகாரம் பொறுப்புக் கூறுவார். இப் பிரிவு இரண்டு உள்ளகக் கணக்காய்வாளர்களை(அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்) உள்ளடக்கியுள்ளது.

12.2 நோக்கம்

2014 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் அமைச்சின் தொலைநோக்கு மற்றும் பணி தொடர்பாக நிதிப்பிரமாணம் 133 கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களினதும், தத்துவங்களினதும் பிரகாரம் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

12.3 விடயப் பரப்பு

1. சமூக சேவைகள் அமைச்சு
2. சமூக சேவைகள் திணைக்களம்
3. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்
4. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
5. முதியோர்களுக்கான தேசிய செயலகம்
6. விழிப்புலனற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியம்

12.4 செயற்பாடுகள்.

1. 2014.12.31ஆந் திகதி வரையான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.
2. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை உரிய தினத்தில் சமர்ப்பித்தல்
3. முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின்போது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடல்.
4. முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட்டுள்ளன.
5. சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களைக் கண்காணித்தல் (தெலம்புயாய, கெட்டவல, வத்தேகம, சீதுவை, ஜயவிருசெவன மற்றும் ஜயவிரு சமாதி இல்லம் - புவக்பிட்டிய)
6. அறிக்கையிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள்


12.5 கணக்காய்வு அவதானிப்புகள்
25
20
15
10
5
0
21
16
12
24
4
சமூக சேவைகள் அமைச்ச
சமூக சேவைகள் திணைக்களம்
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
விழிப்புலனற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியம்

கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி பிரிவு

1. அறிமுகம்

மானிட உணவு வகைகளை பேணிப் பாதுகாப்பதில் கால்நடை வளர்ப்பு பாரிய பங்களிப்பினை நல்குகின்றது.மனிதப் பயன்பாட்டுக்கு உதவாத தாவரப் பகுதிகள் அல்லது சேதனப் பதார்த்தங்களை உபயோகித்து மனிதனுக்கு அவசிமான புரோட்டீன் நிறைந்த உணவுகள் கால்நடை வளர்ப்பினூடாக உற்பத்தி செய்யப்படுவதுடன், அது வருமானம் ஈட்டிக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் கருதப்படுகின்றது. அவ்வாறே, கால்நடை வளர்ப்பு, விவசாயம் ஆகியன தொடர்பாக போதியளவு தொழிலாளர்கள் அவசியமாகின்றனர். அத்துடன் அதற்கான பசளைவகைகளும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும்.

கால்நடை வளர்ப்புத் துறையில், கறவை பசு வளர்ப்பு பிரதான இடம் வகிக்கின்றது. கறவை பசு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, அதற்கானவாய்ப்புக்களை வழங்கி, பேரினப் பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான பயன்களை அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும், நுகர்வோர், சாதாரண விலையில் கால்நடை உற்பத்திப்பொருட்களை கொள்வனவு செய்யக் கூடியதாகவுமான நிலைமையைத் தோற்றுவிப்பதை அடிப்படை இலக்காகக் கொண்டு கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு செயற்படுகின்றது. அவ்வாறே இக் கொள்கை கோழி, ஆடு, பன்றி மற்றும் ஏனைய கால்நடை வளர்ப்புத்துறைகள் ஆகிய அனைத்துத் துறைகள் தொடர்பாகவும் பொதுவானதாக கருதப்படுகின்றன.

விவசாயத்துடன் இணைந்த கால்நடை வளர்ப்பானது,போசாக்கின்மை, வறுமை தணிப்பு ஆகியன தொடர்பாகவும், உணவு வகைகளை பேணிப்பாதுகாப்பது தொடர்பாகவும் உறுதுணை புரிகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு, கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

1. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
2. தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை
3. மில்கோ (தனியார்) கம்பனி
4. மஹாவலி கால்நடை உற்பத்தி கம்பனி
5. இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி தனியார் கம்பனி

1.1 கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதார திணைக்களம்

1978 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமானது, இலங்கையின் கால்நடை வளர்ப்பு தொடர்பான முக்கிய பொறுப்பினை வகிக்கின்றது. இந் நிறுவகத்திடம் இலங்கையின் கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார அலுவல்கள் தொடர்பான சட்டரீதியான அதிகாரங்கள் உட்பட அவற்றை செயற்படுத்துகின்ற பிரதான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கால்நடை வளர்ப்புத் துறை தொடர்பாக தொழிநுட்ப தலைமைத்துவம் வழங்குவதுடன் நெறிப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் தரப் பரசோதனை, கால்நடை வளர்ப்புத் துறையின் சமூக பொருளாதாரமேம்பாடு என்பன அதன் விடயப்பரப்பில் அடங்குகின்றன.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிகள், மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து நிறைவேற்றப்படுகின்றன. மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கீழுள்ள 312கள அலுவலகங்களினால் விவசாயிகளுக்கு சேவைகள் வழங்கப்படுவதுடன், அவ் அலுவலகங்கள் அமைச்சின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் பங்களிப்பு நல்குகின்றன.

1.2 தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை

தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையானது 14,465 ஹெக்ரயார் நிலப்பரப்பில் 34 பண்ணைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், விவசாயிகளுக்கு அவசியமான தரச் சிறப்புடைய இனவிருத்தி செய்யக்கூடிய விலங்கு வகைகளையும் வழங்குகின்றது. இந் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்ட லிபியா விவசாய கால்நடை வளர்ப்பு நிறுவனம் இரத்தானதன் பின்னர், அதன் பணிகளில் ஒரு பகுதி புதிதாக தாபிக்கப்பட்ட இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி தனியார் கம்பனியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இந் நிறுவனத்தினால் இனவிருத்தி செய்யப்படுகின்ற விலங்குகள் திவி நெகும, அரச சார்பற்ற நிறுவனங்கள், பல்வேறு விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாயிகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் இந்நிறுவனத்தினால் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றிய தொழிநுட்ப அறிவு வழங்கப்படுகின்றது. இந் நிறுவனத்துக்குச் சொந்தமான பண்ணையில்

உயர் வகை சார்ந்த விலங்குகளான, ஜர்ஸி, ஃபிரீசியன், ஸஹீவால், கிலாரி, மூரா மற்றும் நிலிரவி ஆகிய விலங்குக் கூட்டங்கள் வளர்க்கப்படுகின்றன.

1.3 மில்கோ தனியார் கம்பனி

இது 1956 ஆம் ஆண்டில் தேசிய பாற் சபையாக தாபிக்கப்பட்டது. பால் சேகரித்தல், பதனிடல் மற்றும் வியாபாரம் என்பன அதன் பணிகளாகும். 1986 ஆம் ஆண்டில் இத் தேசிய பாற் சபையானது, மில்கோ தனியார் கம்பனியாக மாற்றம் பெற்றதுடன், 1997 இல் அது இந்திய தேசிய பால் அபிவிருத்தி சபையுடன் இணைந்து கிரியா கிரி கம்பனியாக மாற்றமடைந்தது. பின்னர், 2001 ஆண்டில் அது 100 % அரசாங்கத்திற்குச் சொந்தமான மில்கோ தனியார் கம்பனியான விளங்கியது

1.4 மஹாவலி கால்நடை வளர்ப்பு நிறுவனம்

1989 ஆம் ஆண்டில் இந் நிறுவனம் மஹாவலி வலய விவசாயிகளின் கால்நடை வளர்ப்புப் பணிகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு தாபிக்கப்பட்டது. மஹாவலி H வலய விவசாயிகளின் நலன்களை மேம்படுத்துவதே இந்நிறுவனத்தின் பணியாகும்.

1.5 இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்திக் கம்பனி

சிறியளவிலான கோழிப் பண்ணை விவசாயத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு தாபிக்கப்பட்ட இந் நிறுவனத்தினால், பிரதானமாக சிறியளவிலான கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

1.6 2014 ஆண்டில் கால்நடை வளங்கள் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

இல	செயற்திட்டம்	2014 ஆண்டு தொடர்பான மதிப்பீடு (ரூபா)	2014/12/31வரையான செலவு (ரூபா)
1	திரவ பால் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்தல்	75,000,000	74,102,654.22
2	இனவிருத்தி விவசாயப் பண்ணைகளைத் தாபித்தல்	35,000,000	34,285,879.35
3	–வடக்கின் வசந்தம்" - மத்திய கால கால்நடை வளங்கள் அபிவிருத்தி செயற்திட்டம்	50,000,000	45,995,645.87
4	கறவை பசுக்களை இறக்குமதி செய்தல்	91,200,000	22,476,618.50
5	சிறிய மற்றும் மத்தியளவிலான கோழிப் பண்ணைகளை உருவாக்குதல்	20,000,000	19,470,959.42
6	தெயட்ட கிருல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	5,000,000	4,788,236.85
7	இலங்கையில் பன்றி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்தல்	15,000,000	10,513,510.66
8	மில்கோ தொழிற்சாலை நவீனமயப்படுத்தல்	1,200,000,000	1,050,000,000.00
	முழுத் தொகை	**1,491,200,000**	**1,261,633,504.87**

2 விலங்கு இனவிருத்தி

2.1 கறவைப் பசுக்களின் இறக்குமதி

தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையினால், நவீன மாடு வளர்ப்பு முறைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் இனவிருத்தி செய்யப்பட்ட விலங்குகளை விவசாயிகளுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு 2000 கறவைப் பசுக்கள் 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. போப்பத்தலாவ பண்ணையில் தற்போதுள்ள பாரம்பரிய மாட்டுப் பட்டிகளை, இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு ஏற்றவாறும், கால்நடைகளின் கழிவுகளை இலகுவாக அப்புறப்படுத்துவதற்கு ஏற்றவாறும் நவீனமயப் படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களின் நாளாந்த பால் உற்பத்தி 23,000 இலிருந்து 25,000 லீட்டர்கள் ஆகும்.அப் பசுக்கள் கன்று ஈனுவதற்கு ஆரம்பித்துள்ளன. ஒரு பசுவின் நாளாந்த சராசரி பால் உற்பத்தி 19 லீட்டர் வரை அதிகரித்துள்ளது. அது கால்நடை

வளங்கள் அபிவிருத்த சபையின் பண்ணைகளிலுள்ள கால்நடைகளின் அதி உச்ச பால்உற்பத்தி பெறுமானமாக குறிப்பிடப்படுகின்றது. பால் ஒரு லீட்டரின் விற்பனை விலை ரூபா 72.00 ஆகும். 2014 ஆண்டிறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட கறவைப் பசுக்கள் ஈன்ற 301 உயர் மரபணுப்பசுக் கன்றுகள் 443 கன்றுகள் உட்படமொத்த பசுக் கன்றுகள் 731 மற்றும் 1,263 கன்றுகள் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை பண்ணையால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

2.2 இனவிருத்தி பண்ணைகளை தாபிக்கும் செயற்திட்டம்

உயர் மரபணு கறவைப் பசுக்களின் பற்றாக்குறையானது, பால் உற்பத்தியை அதிகரிப்பதில் பிரதான தடையாக விளங்குகின்றது. இப்பிரச்சினையைத் தவிர்க்கும் பொருட்டு நாடுபூராவும் இனவிருத்தி பண்ணைகளைத் தாபிக்கும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2014 ஆண்டில் 173 கால்நடை இனவிருத்திப் பண்ணைகளை தாபிப்பது தொடர்பாக அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது. அதனூடாக இனவிருத்திக்குத் தகுந்த விலங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு, மாட்டுப் பட்டிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

2014 ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இனவிருத்தி பண்ணைகளின் எண்ணிக்கை

மாகாணம்	இனவிருத்தி பண்ணைகள்	
	இலக்கு	நடைமுறைப்படுத்தப்பட்ட எண்ணிக்கை
மத்திய	22	23
கிழக்கு	20	19
வடக்கு	17	17
வட மத்திய	17	17
வயம்ப	20	35
சப்ரகமுவ	17	08
தெற்கு	17	16
ஊவா	18	21
மேல்	17	17
மொத்தம்	**165**	**173**

2.3 வணிக ரீதியான எருமை மாடுகளைக் கொண்ட இனவிருத்திப் பண்ணைகளைத் தாபிக்கும் செயற்திட்டம்

தேசிய பால் உற்பத்தியில் எருமை மாடுகளின் பங்களிப்பு அண்ணளவாக 25% ஆகும். அதனை அதிகரித்து, உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 2014 ஆம் ஆண்டில் எருமை மாடுகளைக் கொண்ட பண்ணைகளை அமைக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இச் செயற்திட்டத்தின் ஊடாக உயர் மரபணு எருமை மாடுகளை இனங்கண்டு, நுட்பமான முறையில் எருமை மாடுகளின் இனவிருத்தி பண்ணைகளை அமைத்தல், சிறந்த முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக எருமைப் பால் மற்றும் அதுசார்ந்த உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தல், பண்ணை வேலைகள் தொடர்பாக புதிய தொழிநுட்பத்தினை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக பண்ணைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும் இச்செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.

2014 ஆண்டில் அனுமதியளிக்கப்பட்ட எருமை மாடுகளைக் கொண்ட பண்ணைகளின் எண்ணிக்கை

மாகாணம்	இனவிருத்தி பண்ணைகள்	
	இலக்கு	அங்கீகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கை
கிழக்கு	10	07
சப்ரகமுவ	10	04
தெற்கு	10	11
மொத்தம்	**30**	**22**

2.4 விலங்குகளின் மரபணு மேம்பாடு மற்றும் விலங்கு இனவிருத்தி

நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாக உள்நாட்டு பசு மாடுகளினதும், எருமை மாடுகளினதும் பரம்பலை தரம்வாய்ந்த முறையில் அதிகரிப்பதற்கு, உயர் மரபணுக் கொண்ட மாடுகளின் விந்துகளின் துணையுடன் செயற்கை கருத்தரிப்பு முறைகளை முன்னெடுப்பது பிரதான விலங்கின இனவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். விந்து உற்பத்தி செய்து விநியோகித்தல், செயற்கை கருத்தரிப்பு

வல்லுநர்களை பயிற்றுவித்தல், புற்கள் மற்றும் போசாக்கு புல் வகைகளை இனங்காணல்/ மேம்படுத்தல், புற்செய்கை தொடர்பான பயிற்சி வழங்கல் ஆகியன இச் செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகளாகும். இவ் ஆண்டில் குண்டசாலை மற்றும் பொலன்னறுவையில் அமைந்துள்ள செயற்கை கருத்தரிப்பு நிலையம் மூலம்,362,833 விந்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், பிராந்திய கால்நடை வைத்திய நிலையங்களினால் 185,076 செயற்கை கருத்தரிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. துறைசார்ந்த கால்நடை வைத்தியர்களினால் செயற்கை கருத்தரிப்பு செய்யப்பட்ட 46,664 பசுக்களினதும்/ மாடுகளினதும்கர்ப்பப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்காலப் பகுதியினுள் ஈன்ற கன்றுகளின் எண்ணிக்கை சுமார் 59,368 ஆகுமென அறிக்கையிடப்பட்டுள்ளன.

2.5 பசுக்கன்று வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

செயற்கை கருத்தரிப்பின் மூலமான உரிய பயன்களை பெற்றுக்கொள்வதற்கும், தேசியபால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் செயற்கை கருத்தரிப்பு சேவை மூலம் ஈன்ற பசுக்கன்றுகளை உரியவாறு பேணிப் பாதுகாப்பது இன்றியமையாதது. இதன்போது, பண்ணை மட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் தாக்கம் செலுத்துகின்றன. நாட்டில் இனவிருத்திக்குத் தகுந்த பசுக்கன்றுகளின் பரம்பலை அதிகரிப்பதற்கும், அதன் மூலம் உள்நாட்டு பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் செயற்கை கருத்தரிப்பு மூலம் ஈன்ற பசுக் கன்றுகளை பதிவுசெய்து, தொழிநுட்ப ஆலோசனை சேவைகள் மற்றும் தேவையான உள்ளீடுகளை வழங்குவது தொடர்பாக, 2008 ஆண்டின் பசுக்கன்று வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் மீளவும் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இவ் ஆண்டினுள் 13,218 பசுக் கன்றுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

2.6 பசுக்கள் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

உயர் மரபணு இனவிருத்தி பசுக்கள் தொடர்பாக எழுகின்ற கேள்விக்கு ஏற்றவாறு இபுல்தெனிய மற்றும் தெலஹெரயில் அமைந்துள்ள பசுக்கள் இனவிருத்தி பண்ணை, திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்றது. இவ் ஆண்டில் உற்பத்தி

மற்றும் வினைத்திறனை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு, பசு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஜம்னாபாரி வகையைச் சார்ந்த 146 பசுக்கள் மற்றும் 327 பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பசுக்களின் அடர்த்தியை அதிகரிக்கும் பொருட்டு கள மட்டத்தில் 3,948 செயற்கை கருத்தரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.7 பன்றி விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கால்நடை வளங்கள் வகையைச் சார்ந்த முலையூட்டி விலங்குகளுள் பன்றிகள் குறிப்பிடத்தக்கனவாகும். மிக விரைவில் பெருகுகின்ற மாமிச உற்பத்திகளாகவும், அவை எந்தவொரு இறைச்சி தொழில் தொடர்பாகவும் பயன்படுத்தக் கூடிய உணவுகளாகவும் கருதப்படுகின்றன. இலங்கையில் பன்றி வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் கரையோரப் பிரதேசங்களில் பரந்துபட்டுக் காணப்படுகின்றனர். மொத்த பன்றிகளின் அடர்த்தி 85,000 ஆகும். பன்றி தொழில் மிகவும் இலாபமீட்டக்கூடியதும், உற்பத்தித் திறன் கொண்டதுமான ஓர் தொழிலாகும்.

இத்தொழிலானது, தற்போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதாவது இதன் காரணமாக சுற்றாடல் மாசடைவது பற்றி தினந்தோறும் பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன. நாட்டிலுள்ள சிறு பன்றி பட்டிகளில் இடம்பெறுகின்ற உள்ளக இனவிருத்தி காரணமாக நல்ல தரமான விலங்குகளை பெற்றுக்கொள்ள முடியாது விடுகின்றன. அதன் காரணமாக இலாபத்தையும் வினைத்திறனையும் இழக்க நேரிடுகின்றது.

அதற்கமைய, பன்றி வளர்ப்புத் தொழிலின் உற்பத்தி மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவது தொடர்பாக தேசிய கால்நடை வளங்கள் சபைக்குரிய ஹொரகேலே பண்ணையில் சிறியளவு பன்றி பட்டியொன்றை அமைப்பது தொடர்பாக நல்லின பெண் பன்றிகள் மற்றும் பன்றிகளை இறக்குமதி செய்தல், மேல் மாகாணத்தின் கொடக தெனியாவில் விலங்கின வளர்ப்பு பயிற்சி நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்கை கருத்தரிப்பு பணிகளை விருத்தி செய்தல், தற்போதுள்ள பண்ணைகளினால் சுற்றாடல் மாசடையாதவாறு தரத்தினை மேம்படுத்துவது ஆகிய பணிகள் இச் செயற்திட்டத்தின் மூலம் மேற் கொள்ளப்படுகின்றன.

- உயர் மரபணு கொண்ட 20 பெண் பன்றிகளை இறக்குமதி செய்தல்
- தற்போதுள்ள 36 பன்றிப் பண்ணைகளை சுற்றாடலுக்கு உகந்தவாறு, அவற்றின் தரத்தை மேம்படுத்தல்
- ஆரம்பத்தில் வயம்ப மற்றும் மேல் மாகாணத்தில் 2 முன்மாதிரி பன்றிப் பண்ணைகணை அமைத்தல்.
- கொடகதெனிய கால்நடை வளர்ப்பு பயிற்சி நிறுவகத்தின் பன்றி விந்துகளை தயாரிக்கும் நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்கை கருத்தரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை வலுவூட்டல்.
- தற்போது கொடகதெனிய கால்நடை வளர்ப்பு பயிற்சி நிறுவகத்தில் அமைந்துள்ள செயற்கை கருத்தரிப்பு நிலையத்தின் மூலம் குளிரூட்டப்பட்ட விந்துக்கள் தயாரிக்கப்படுவதுடன், 2014 ஆண்டில் 78 செயற்கை கருத்தரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அச் செயற்கை கருத்தரிப்புக்கள் மூலம் ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் ஈன்ற பன்றிக் குட்டிகளின் எண்ணிக்கை மொத்தம் 118 ஆகும்.

2.8 கோழிப் பண்ணை விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கோழி வளர்ப்பினூடாக ஏற்றுமதிச் சந்தையை வெற்றிகொண்டு, அதன் வாயிலாக தன்னிறைவடைந்த நாடாக இந்நாட்டினை மாற்றியமைப்பதே கோழிப் பண்ணை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

